½ R R No: 145/66

மேழிச்செல்வம்

பராபவ ஸ்ரீ ஆவணி மீ 1966- ஆகஸ்ட்-செப்டம்பர். விலை 25 பை.

MADRAS RECORD OFFICE
4408
31 AUG 1966
EGMORE, MADRAS



குறுவை நெல் கொழிக்க
தவறாமல் மேலுரமிடுங்கள் மருந்தடியுங்கள்

வீரிய ஒட்டு மக்காச்சோளம் கதிர்கள்

கட்டுரை—பக்கம் 17 பார்க்க :—

மேழிச்செல்வம் சந்தா தாரர்களுக்கு

நினைவூட்டுகிறோம்.

1966-ம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் மாதம் (புரட்டாசி) மாதம் இதழுடன் முடிவாகும் ''மேழிச்செல்வம்'' சந்தா தாரர்களின் சந்தா எண்கள் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

மாவட்டம்	சந்தா எண் முதல்	வரையுள்ள
செங்கல்பட்டு	4227	4249
தென் ஆற்காடு	8090	8273, 8275
வட ஆற்காடு	1538	1613
தஞ்சாவூர்	2855	2962
திருச்சி	8568	8707
சேலம்	190	308
மதுரை	5056	5214
கோயமுத்தூர்	7304	7582
இராமநாதபுரம்	4276	4325
திருநெல்வேலி	1438	1584
கன்னியாகுமரி	2215	2260
நீலகிரி	5232	5326
உள்ளூர் சந்தா	2738	2778

''மேழிச்செல்வம்'' தொடர்ந்து பெற மேற்படி சந்தா தாரர்கள் வருட சந்தாத் தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) 1966-ம் ஆண்டு ஆகஸ்டு 31-ந் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பி புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.—

"விவசாய நெறியாளர்,
தபால் பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை-5."

புதுப்பிக்கும்போது தவறுமல் மாவட்டத்தையும் சந்தா எண்ணையும் அதில் குறிப்பிடவும்

முன்பு தலைமை அலுவலகத்தில் சந்தா செலுத்தியவர்கள் சந்தா எண்ணுடன் உள்ளூர் சந்தா என்று குறிப்பிடவும்.

புதிதாக சந்தா செலுத்த விரும்புவோர் ஆண்டு சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) அருகில் உள்ள விவசாய அலுவலகத்தில் செலுத்தலாம், அல்லது மணியார்டர் மூலம் மேற் குறிப்பிட்ட முகவரியில் செலுத்தி சந்தாதாரராகப் பதிவு செய்துக் கொள்ளலாம். சந்தா தொகை செலுத்தும்போது தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்று கொள்ளப்பட மாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால், மாவட்டம், சந்தா எண் முதலிய வற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேற்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதவும்.

உள்ளுரை

பக்கம்

வனமகோத்சவம்—தலையங்கம் .. 5

வீரிய ஒட்டுப் பயிர்கள் விளைச்சல் ஓங்க 7

தென்னை தாய் மரப் போட்டியும் வெற்றிக்கு வழிகளும் 9

விவசாயச் செய்திக் கதிர் .. 10

புகையிலை உற்பத்தி பெருக தீவிர சாகுபடித் திட்டம் 12

பப்பாளி ஒரு பயனுள்ள பழம் .. 15

கலப்பு வீரிய மக்காச் சோளம் 17

பேராவூரணி! உயர்ந்த களர் நெல் .. 19

கேள்வி பதில் .. 20

விவசாய வேலைகள் மாத அட்டவணை உருளைக் கிழங்குப் பயிர் 23

வானொலி .. 24

காலநிலையறிக்கை .. 28

விளம்பரங்கள் :

ஒவ்வொருவருக்கும் ஏற்ற சேமிப்புத் திட்டங்கள் 4

கஜலக்ஷ்மி கலப்பு உரங்கள் .. 11

ராஜா பண்ணைத் தோட்டம் .. 18

நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் (முதல் வெளியீடு) 22

மேழிச்செல்வம்

வருடாந்திர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

ஒவ்வொருவருக்கும் ஏற்ற சேமிப்புத் திட்டங்கள்!

இதோ இவர்தான்

மிஸ்டர் ரியாஸ் அஹமத்

இந்த மனிதர் ஒரு அனுபவசாலி. அவருக்கு சேமிப்பின் முக்கியத்துவம் நன்ருகத் தெரியும். பிரதி மாதமும் அவர் ஒரு நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் ரு. 100 மதிப்பிற்கு வாங்கி வருகிருர் பத்து வருடங்கள் முடிந்த பிறகு அவருக்கு பிரதி மாதமும் ரு. 180 வீதம் தவருமல் தொகை கிடைத்துக் கொண்டிருக்கும்.

மிஸஸ் டி. எஸ். சுந்தரம்

இந்த மாதரசி சிக்கனத்திற்கு பெயர் பெற்ற குடும்பத் தலைவி. திட்டமிட்டு வீட்டை நிர்வகிப்பதில் நம்பிக்கையுள்ளவர். அவரது கியுமுலேட்டிவ் டைம் டிபாசிட் கணக்கில் பிரதி மாதமும் ரு. 10 வீதம் கட்டி வருகிருர். 15 ஆண்டுகளுக்குப் பிறகு இவருக்கு ரு. 2,600 மொத்தமாகக் கிடைக்கும். இவரது பெண்ணின் கல்யாண சமயத்திற்கு உதவியாக இத் தொகை வருகிறது.

சிறுவன் தபன் கோஷ்

தனது சொந்த தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கு கணக்கை வைத்துக் கொள்வதில் பெருமைப் படுகிருன். அவன் சொந்தச் செலவுக்காக கொடுக்கப்படுவதில் ஒரு பகுதியை தவருமல் இக் கணக்கில் கட்டி வருகிருன். இளம் வயதிலேயே இவ்வளவு அரிய முறையில சேமிக்கப் பழகி வருகிருன்.

மூன்று தனி நபர்களுக்கும் மூன்று தனிப்பட்ட தேவைகள்
தேசீய சேமிப்புத் திட்டங்கள் எல்லோருக்கும் பயன் படுகின்றன

ங்கள் தபாலாபீசில் இவைகளைப் பற்றியும் இதர தேசீய சேமிப்புத் திட்டங்களைப் பற்றியும் விசாரியுங்கள்.

தேசீய சேமிப்பு நிறுவனம்

DA-66/222

மேழிச்செல்வம்

சுழன்று மேர்ப்பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 23	பராபவ௵ ஆவணி௴ 1966—ஆகஸ்ட்-செப்டம்பர்	இதழ் 8

வனமகோத்சவம்

ஆண்டுதோறும் வனமகோத்சவம் கொண்டாடுகிறோம். ஜூலை முதல் வாரம் சிறப்புத் தொடக்க வாரமாகத் தொடங்கி, அக்டோபர் முதல் வாரம் வரை வனமகோத்சவம் நீடிக்கிறது. இந்த ஆண்டு 1966, பதினேழாவது வனமகோத்சவம். ஆண்டுக் கொருமுறை வந்து செல்லும் ஒரு சாதாரண விழா அல்ல வனமகோத்சவம். வனமகோத்சவத்தின் தோற்றமும், அதன் அடிப்படைத் தத்துவமும் உயரியது, உள்ளத்தை நெகிழ வைப்பது. அதைப் புரிந்து கொள்ளும் எவரும் ''மரங்கள் நடுவோம். நட்ட மரங்களைப் பேணி வளர்ப்போம்'' என உறுதி பூணுவர்;

சாதாரணமாக ஒரு நாட்டில் மழை போன்ற இயற்கை நிலைகள் மாறுபடாமல் இருக்கவும் பிற வசதிகளுக்கும் நிலப்பரப்பில் 30% கானகங்கள் இருக்கவேண்டும். ஆனால் நம் நாட்டில் மொத்தமாக கணக்கெடுத்தால் சுமார் 11% அளவே கானகங்கள் உள்ளன. நமது தமிழகத்தில் சுமார் 14% வரை காடுகள் உள்ளன. ஆகவே நம் நாட்டைப் பொருத்தவரை பருவ மழைகள் தவறுவதும் மிகச் சொற்பமான மழைகளே பெய்வதும் ஆண்டுக்கு ஆண்டு சகஜமாகிக் கொண்டு வருவதைப் பார்த்தால் ஒரு சமயம் காடுகள் பெருமளவு குறைந்துவிட்டதே இதற்குக் காரணமோ என்று கூட அச்சம் எழுகிறது. காரணம் வீடுகள் கட்டவும் விறகுகளுக்காகவும், கரிகளுக்காகவும், இன்னும் விவசாயத்திற்கென்றும் மரங்களை நாளுக்கு நாள் அதிகமாக வெட்டுகிறோம், கானகங்களை அழிக்கிறோம். நாம் வெட்டி அழிக்கும் மரங்களில் மிகச் சொற்ப அளவில் கூட அவைகளை நட்டு நிரப்புவதில்லை. இந்தப் பெரிய, துரிதமாக ஈடுசெய்யாத நஷ்டத்தை எந்த வழியில் சரிக்கட்டுவது? மீண்டும் மீண்டும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே யிருக்கும் நமது பல்வேறு தேவைகளை எப்படிச் சரிக்கட்டுவது?

1985 ஆண்டு வாக்கில் தொழில் துறைகளுக்காக 50 மில்லியன் கனமீட்டர் மரமும், எரிக்கும் விறகுகளுக்காக ஆண்டுக்கு 140 மில்லியன் கனமீட்டர் மரமும் தேவையாக இருக்குமென்பதாகக் கணக்கிடப் படுகிறது. மேற்கொண்டு மிகமிக அதிகமான அளவு மரங்கள் நட்டு காட்டுவளத்தைப் பெருக்கினால் அன்றி 1985 வாக்கில் ஏற்படப்போகும் இந்தத் தேவைகள் தலைவேதனை தரும் பெரும் பிரச்னைகளாகி விடும். வனத்துறையாளர்கள் மரங்களை அதிகம் நட்டு உற்பத்தி செய்கிறார்கள் என்றாலும் ஊர் நிலங்களில் வெட்டப்படும் மரங்களுக்குப் பதிலாக நட்டு உற்பத்தி செய்வது யார்? இந்தக் குறையை ஈடு செய்வதற்காகத்தான் வனமகோத்சவம்.

காடுகளில் மட்டுமல்ல நாட்டுப்புறங்களில், சாலையோரங்களில், ஆறுகள், குளங்களின் கரைகளில் இன்னும் எங்கெங்கெல்லாம் மரங்களை நட்டு உண்டாக்க முடியுமோ அங்கெல்லாம் மரங்களை நடவேண்டும். இந்த நோக்கத்தை இன்றியமையாத தேவையென மனதில் வைத்துத்தான் நமது மத்திய உணவு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ''கிராமங்களில் வனமகோத்சவத்தால் சாதிக்க வேண்டியவை மிகுதி. ஆகவே இந்த வனமகோத்சவம் சமயத்தில் கிராமப்புறங்களில், விறகாக, தழையாக, மரமாக ஆகிய பல வழிகளில் பயன்தரக்கூடிய மரங்களை பெருமளவு நடுவதில் தீவிரம் காட்டவேண்டும்'' என்று மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு தேசப்பணியாக சேவை மனப்பான்மையோடு செய்யவேண்டும். மரங்கள் வீட்டிற்கு விட்டத்தையும், எரிக்க விறகையும் மட்டுமா தருகின்றன? களைத்தஉடம்புக்கு இதமும் அயர்ந்து சலித்துப்போன உள்ளத்திற்கு அமைதியையும் உற்சாகத்தையும் அவை தருகின்றன, பூங்காக்கள் இல்லாத நகரத்தில் மன அமைதிக்கு இதமான காற்றை மக்கள் காசு கொடுத்தா வாங்க முடியும்? ஆகவே எந்தக் கண்ணோட்டத்தி லிருந்து பார்த்தாலும் அதிகமாக மரங்கள் நாட்டுப்புறங்களிலும் நடுவோம் என்பதை ஒரு தேசப்பணியாக நாம் ஆக்கிக்கொள்ள வேண்டும்.

கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் எந்தெந்த மரங்களை நடுவது ? பல வகையிலும் உபயோகமாகக் கூடியதும், சீக்கிரம் பலன் தரக்கூடியதுமான மரங்களை நடுவது நல்லது. சாலை ஓரங்களிலும், குளங்கள் கரைகளிலும், தழைகளும், விறகும், பழமும் தரும் புளி, புங்கன், வேம்பு, பூவரசு, ஆல், கருவேல், வெள்வேல், வாதநாராயணன் போன்ற மரங்களை நடலாம். மணல் வெளிகளிலும், பொட்டல்களிலும் சவுக்கு போன்ற மரங்களை நடலாம். அலுவலகங்கள், கல்லூரிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் போன்ற இடங்களில் கிளிரிசிடியா, பூவரசு, வேம்பு, வேங்கை போன்ற மரங்களை நடலாம். கவனிப்புக் குறைந்த கிராம ஒதுக்குப்புறங்களில் வேறு உபயோகத்திற்குப் பயன்படாத நிலத்தில் சீமைக்கருவேலன் (புரோசாபிஸ்) போன்ற மரங்களை வளர்க்கலாம். இதேமாதிரி கடந்த ஆண்டுகளில் நட்ட மரங்கள் செழித்துப் பயன் தருமாறு அவைகளைப்பேண வேண்டும். நாம் வைத்த மரங்கள் நமக்கே நிழல் தருவதும்,நம் வீட்டுக்கே உபயோகம் ஆவதும் காண எத்தனை மகிழ்ச்சி! நாம் பெற்ற குழந்தைகள் நம்மைப் பேணுவதில் காணும் இன்பம்போல.

இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த மரம் நடும் பணியை, நட்ட மரங்களைப் பேணும் பணியை அதன் தத்துவத்தைப் புரிந்துகொண்டு நாட்டு மக்கள் யாவரும் மேற்கொள்ள வேண்டும். விவசாயிகள், கிராமங்களிலுள்ள பல்வேறு சங்கங்கள், பொதுச்சேவை நிறுவனங்கள், கல்லூரிகள், பள்ளிகள் எல்லாம் இப்பெரும் பணி நிறைவேற தங்கள் பங்கைச் செலுத்த முந்துவார்கள் என்பது திண்ணம்.

வீரிய ஒட்டுப்பயிர்கள் விளைச்சல் ஓங்க

எஸ். எம். சுலேமான், கூட்டு விவசாய நெறியாளர், சென்னை.

மாநில விவசாயக் கூட்டு நெறியாளர் (விதைப் பண்ணைகள்) திரு. எஸ். எம். சுலேமான் அவர்கள் கடந்த 1966-ம் ஆண்டு மே மாதம் 17-ம் தேதி முதல் 22-ம் தேதி முடிய ஆறு நாட்கள் கோயமுத்தூர் மாவட்டப் பகுதிகளில் வீரிய ஒட்டுப் பயிர்களின் நிலைகளை ஆராயும் பொருட்டு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். பல்வேறு இடங்களில் சி.எஸ்.எச். 1 சோளம், எச். பி. 1 கம்பு பயிர்களைப் பார்வையிட்டு ஆராய்ந்த அவரது அறிக்கை வீரிய ஒட்டுப் பயிர் விதை உற்பத்தியாளர்கள், தானிய உற்பத்தி செய்யும் விவசாயிகள் யாவர்க்கும் சிறந்த பயனுடையதாயிருக்கிறது.

மண்

கெட்டியான களிமண் தவிர எல்லா வகையான மண்ணும் சி. எஸ். எச். 1 சோளத்திற்கு உகந்தது. ஓடைச் சல்லியானால் 9" ஆழமுள்ள மண் வேண்டும். கட்டைப் பயிர் விடுவதற்கும், பார் பிடித்து பயிர் செய்வதற்கும் இந்த 9" மண் அவசியம். கம்புக்கு சிறிது களிமண்ணாயிருந்தாலும் மோசமில்லை. மண் ஆழமும் 9" வேண்டுமென்பதில்லை. ஆனால் கம்பு சோளம் இரண்டுக்குமே களர் நிலங்கள் கூடவே கூடாது, சோளம் மட்டும் சிறிது உப்புத் தன்மையைத் தாங்குகிறது.

பருவம்

பிப்ரவரியில் விதைத்த சோளத்தில் மைட் (சிலந்திப் பூச்சி) அதிகம். மார்ச்சு—ஏப்ரலில் விதைத்த பயிரில் குறைவு. ஆகையால் தானியப் பயிருக்கு மார்ச்—ஏப்ரல் மாத விதைப்பு மிகச் சிறந்தது; 'மிட்ஜ்' என்ற பூச்சியின் தாக்குதலையும் தவிர்க்கிறது.

கம்புக்கு ஏப்ரல் கடைசி வாரம், மே மாதம் மிக உகந்தது.

விதைப்பு

சி. எஸ், எச். 1 சோளம்

ஏக்கருக்கு 5 கிலோ விதை அதிகமாகப்படுகிறது. 3-லிருந்து 4 கிலோ போதுமானதாகும்.

சி. எச். எஸ். 1 கம்பு

நாற்று விட்டு நட ஏக்கருக்கு 1 கிலோ; கை விதைப்புக்கு $1\frac{1}{2}$ கிலோ விதை போதுமானது.

இடைவெளி

சோளம், கம்பு இரண்டுக்குமே பாருக்குப் பார் இடைவெளி 18" வேண்டும். பாரில் செடிக்குச் செடி இடைவெளி சோளத்துற்கு 6 அங்குலமும், கம்புக்கு 9 அங்குலமும் வேண்டும். பார் பிடித்து அதில் விதைப்பு, அல்லது நாற்று நடவு செய்வதில் பாத்தியில் பயிர் செய்வதை விட நன்மைகள் உள்ளன. பாரில் செடி வளரும்போது மேலுரங்கள் உரிய அளவு இடுவது சுலபமாகிறது.

உரமிடல்

குப்பை எரு: குப்பை எருக்களைப் போதுமான அளவு போடுவது சோளம் கம்பு இரண்டு பயிருக்கும் முக்கியம். இது பயிர் பலமானதாக வளர உதவுகிறது. சோளத்திற்கு அதிகமான குப்பை எரு வேண்டுமானால் அதை முந்தின பயிருக்கே போடுவது நல்லதாகத் தெரிகிறது.

இரசாயன உரம்

பயிர்		தழைச் சத்து	தானியச் சத்து	சாம்பல் சத்து
சோளம்	கிலோவில்	36	18	18
கம்பு		36	18	..

தானியச்சத்தையும், சாம்பல் சத்தையும் பாதி அளவு தழைச்சத்தையும் அடியுரமாகக் கடைசி உழவில் போட வேண்டும். மீதி பாதியளவு தழைச்சத்தை முதல் தடவை உரமிட்ட நான்கு வாரத்தில் போட வேண்டும். சோளம், கம்பு இரண்டிலுமே தழைச்சத்துக்காக அமோனியம் பாஸ்பேட்டைப் போடுவது அதிக நன்மை கொடுக்கிறது. உரங்களை மேலாகப் போடுவதை விட 1 அங்குலம் ஆழத்தில் வைத்து மண் மூடுவது நிச்சயம் சிறந்தது.

சோளம், கம்பு பயிர்களில் தண்ணீர் எப்பொழுதும் தேங்கி நிற்பதில்லையாகையால் கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்டும் இடலாம்.

பாசனம்

சோளத்திற்கு 7 நாட்களுக்கு ஒருமுறையும், கம்புக்கு 10 நாளைக்கு ஒருமுறையும் பாசனம் தேவை. இது மழை பெய்வதையும், மண்ணின் தன்மையையும் பொருத்து மாறுபடும்.

சோளப்பயிரை முளைப்புப் பாசனத்திற்குப் பிறகு நன்கு வேர் பிடிப்பதற்கும், குருத்து ஈ தாக்குதலைப் பெருமளவு தடுப்பதற்கும் முளைத்து எழுந்ததற்குப் பின் 3 வாரம் வரை பயிரை ஓரளவு காய விடலாம். கம்புக்கு முளைப்பிலிருந்து சீரான பாசனம் தரவேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு

பொதுவாக வீரிய ஒட்டுப் பயிர்கள் எல்லாவற்றையுமே பூச்சி, நோய்கள் அதிகமாகவும், கொரமாகவும் தாக்குகின்றன. ஒட்டுச்சோளம் இவற்றுள் மிகுதியாகப் பாதிக்கப்படுகிறது.

சோளத்தில் பெருமளவு வரும் பூச்சிகளாவன:

(1) குருத்து ஈ:—இது பயிர் முளைத்து நான்காவது நாளிலிருந்து மூன்று நான்கு வாரம் வரை இருக்கும்.

(2) தண்டுப்புழு:—குருத்து ஈயைத் தொடர்ந்தே மூன்று நான்காவது வாரத்திலிருந்து பூவிடும் வரை பயிரைத் தாக்குகிறது.

(3) மைட்:—பயிரின் காலம் முழுவதும்.

(4) மிட்ஜ்:—கதிர் விடும் தருணத்தில்.

(5) கதிர் நாவாய்ப்பூச்சி:—கதிர் பால் பிடித்து திரளும் பருவத்தில். குளிர்ச்சியான காற்று அதிகமான பருவத்தில் இப்பூச்சி விரைவில் பரவுகிறது.

(6) வெட்டுப்புழு:—சோளத்தின் எல்லா நிலைகளிலும் தாக்குகிறது.

(7) சாறுவடிதல் நோய்:—ஆரம்பத்திலிருந்து மணி உருவாகும் வரை.

(8) பேன்கள்:—பயிரின் எல்லா நிலைகளிலும் தாக்குகிறது.

மேற்கண்ட பூச்சி நோய்களில் மிகவும் கொடியவை, குருத்து ஈ, மைட், மிட்ஜ், பேன் ஆகியவையாகும்.

பயிரை நல்ல முறையில் பாதுகாக்க கீழ்க்கண்ட முறை சிறந்தது.

எண்டிரினை மெட்டாசிஸ்டாக்சுடன் கலந்து அடிக்க வேண்டும். இந்த மருந்தை முதல் வாரத்தில் தொடங்கி சாதாரணமாக ஒரு வாரத்திற்கொருமுறை அடிக்க வேண்டும். மூன்று தடவை இதே மருந்தை அடிக்க வேண்டும். இதனால் குருத்து ஈ, தண்டுப்புழு, மைட் போன்ற பூச்சிகள் அழிகின்றன.

ஐந்தாவது வாரத்திலிருந்து செவினையும், கரையும் கந்தகத்தையும் கலந்து வாரத்திற்கொருமுறையாக இரண்டு முறை அடிக்க வேண்டும். இது பேனையும் மைட்டையும் அழிக்கும். புடை வெளிவந்த தருணத்திலிருந்து கதிர் முற்றும் வரை டி.டி.டி., பி.எச்.சி. ஆகிய மருந்துகளை சமஅளவில் கலந்து வாரத்திற்கொரு முறையாக இரண்டு தடவை தூவ வேண்டும்.

எந்தவிதமான தாமிரக் கலவை மருந்துகளையும் சோளத்திற்கு அடிக்கக்கூடாது. ஏனெனில் தாமிரக் கலவை மருந்துகள் சோளத்தை எரித்து விடுகிறது.

கம்பில் ரஸ்ட் என்னும் சொறி நோய் கடுமையாகக் காணப்படுகிறது.

இதர கவனிப்பு

சோளத்தில் தூர்கள் வளரவிடக்கூடாது. கம்பில் தூர்கள் அதிகம் கிளைக்குமாறு செய்யவேண்டும். தண்டுப் புழுவால் சோளத்தில் தூர்கள் பிரிந்தாலும், நலமடைந்த பின் பலமான ஒரே கிளையை விட்டு விட்டு மற்றவற்றை வெட்டியெறிந்து விட வேண்டும்.

தென்னை தாய்மரப் போட்டி

தென்னையில் அதிக விளைச்சல் என்பது ஒரு நாளில் அல்லது ஒரு காரியத்தால் அடைந்து விடக் கூடியதல்ல. நாலைந்து ஆண்டுகள் கழித்து வரப்போகும் உறுதியான பலனுக்கு இப்பொழுது கால்கோள் போடுகிறோம். இப்பொழுது செய்யும் இம்முதற்காரியத்தில் தவறு நேர்ந்தால் அதைத் திருத்துவது முடியாது. ஆம்! தென்னையில் நல்ல காய்ப்புக்கு தரமான தென்னங்கன்று அடிப்படை. நல்ல தென்னங்கன்றுக்கு நல்ல தரமான விதை நெற்று ஆதாரம். நல்ல தரமான நெற்றுக்கு திருப்திகரமான விளைச்சல் கொடுத்த பாரம்பரியப் பெயர் கொண்ட தாய்மரம் இன்றியமையாதது. ஆகவே தென்னை உற்பத்தியை அதிகரிக்க விரும்பினால் அதற்கு அடிப்படையான தாய் மரங்களைப் பேணிப் பெருக்கிக் கொள்வது முன்னோடியாக இருக்க வேண்டும். இத்தகைய இன்றியமையாத முக்கியம் வாய்ந்த தென்னை தாய்மரங்களைப் பெருமளவு அதிகப்படுத்த வேண்டுமென்பது விவசாயத் துறையின் நோக்கம். நல்ல வித்து நெற்றுகள் தரக் கூடிய தாய்மரங்களை எல்லாப் பகுதிகளிலும், அதிகம் பேர் உண்டாக்கிப் பராமரிக்க ஊக்குவது அவசியம். இதற்காகத்தான் 'தென்னை தாய்மரப் போட்டி' என்னும் பரிசுத் திட்டம் கடந்த சில ஆண்டுகளாகவே நடைபெற்று வருகிறது.

திட்டத்தின் நோக்கங்களும் அதனால் கிடைத்த பலன்களும் யாவர்க்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளன.

தென்னந்தோப்பு வைத்திருப்போர் அனைவரும் இந்த நோக்கங்களையும் நிபந்தனைகளையும் படித்தறிவது நல்லது.

போட்டியின் நோக்கம் :

1. தென்னங்கன்றுகளைப் பெற, நல்ல காய்ப்புகள் தரும் மரங்களையே நெற்றுகள் எடுக்கத் தேர்ந்தெடுத்தல்.

2. இலாகா சிபாரிசு செய்யும் நவீன விவசாய முறைகளை தாய்மரங்கள் வளர்ப்போர் கடைப்பிடிக்குமாறு ஊக்குவித்தல்.

3. போட்டியில் பங்கு பெறும் தோப்பில் அதிக அளவு தாய் மரங்கள் இருக்குமாறு தனிக்கவனம் செலுத்துதல். 1961-1962 ஆண்டிலிருந்து இத்திட்டம் நீலகிரி தவிர மற்ற மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது.

பரிசுகள் :

போட்டியில் கலந்த தோப்புகளில் உள்ள ஒவ்வொரு தென்னை தாய் மரத்திற்கும் பரிசு ரூபாய் 2.

மாநில அளவில் அதிகப்படியான தாய்மரங்களை வளர்பவருக்கு மாநில பரிசாக ரூ. 500/-.

துணை விவசாய நெறியாளரின் மண்டல அளவில் அதிகப்படியான தாய்மரங்கள் பராமரிப்பவருக்கு பரிசு ரூ. 100.

மாவட்ட அளவில் அதிகப்படியான தாய்மரங்கள் பராமரிப்பவருக்குப் பரிசு ரூ. 50.

தாய்மரப் போட்டியில் கலந்துகொள்ள:

(1) குறைந்தது ½ ஏக்கர் தென்னந்தோப்பு அல்லது வரிசையில் நட்டிருந்தால் 40 மரத்துக்குக் குறையாமல் மரங்கள் இருக்க வேண்டும்.

(2) நுழைவுக் கட்டணம் ரூ. ஒன்றுதான். ஜூன் முதல் நவம்பர் வரை பெயர் பதியலாம்.

(3) தாய்மரம் தேர்வு நீதிபதிகள் ஜனவரியிலிருந்து மே மாதம் வரை மரங்களைப் பார்வையிடுவார்கள்.

தாய்மரத் தென்னையின் குணங்கள்:

(1) நடுத்தர வயதுடைய மரமாக அதாவது முப்பது வயது பெற்றுள்ளதாக இருக்கவேண்டும்.

(2) எப்போதும் மரத்தில் குறைந்த அளவு பன்னிரண்டு குலைகளில் இளங் காய்களிலிருந்து நெற்று வரை காய்கள் இருக்க வேண்டும்.

(3) குலைத்தண்டு, குட்டையாகவும் உறுதியாகவும், தடித்தும் இருக்க வேண்டும். இது கீழ்நோக்கி வளையாமலும் இருத்தல் வேண்டும்.

(4) தென்னை நெற்றுகள், உருண்டையாகவும், நடுத்தர பருமனாகவும் இருக்க வேண்டும். பருப்பு நல்லதாக இருத்தல் வேண்டும்.

(5) மேற்சொன்ன அம்சங்களோடு ஆண்டுக்கு குறைந்த பட்சம் 100 காய்கள் தரும் மரமே தாய் மரமாகும்.

மழைகுறைந்த இடங்களிலும், ஈரம் சீக்கிரம் காய்ந்து போகும்படியான மணல் பூமிகளிலும் வளரும் தாய் மரம் குறைந்தது 80 நெற்றுகள் காய்ப்பு தரவேண்டும்.

தாய்மரப் போட்டியில் கலந்து கொள்ள வசதிகள் இருக்குமானால் அதில் வெற்றி பெறுவதற்கு வேண்டிய சாகுபடிக் குறிப்புகள் வேண்டுமல்லவா? உங்கள் வெற்றிக்கு உதவும் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. படித்து நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தென்னை சாகுபடி குறிப்புகள்

நடுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னரே ஒரு கண மீட்டர் அளவான குழிகளை தோண்டி வைக்கவும்.

மரங்களுக்கிடையே 7·5 மீட்டர் முதல் 9 மீட்டர் வரை இடைவெளி இருக்க வேண்டும். ஏக்கருக்கு 60-80 மரங்கள் இருக்கலாம்.

கரையான்களைத் தடுக்க குழிகளில் குப்பைகளை போட்டு கொளுத்தவும்.

கன்றுகளை தேர்ந்தெடுத்தலும், நடுதலும் :

(1) அரசினர் நாற்றங்காலிலிருந்து கன்றுகளை வாங்குங்கள்.

(2) குழியின் அடியில் உதிர் மண்ணும், சாம்பலும் ஒரு அடி வரை இடவும்.

(3) தரையின் மட்டத்திலிருந்து 60 செ. மீட்டர் ஆழத்தில் கன்றினை நேராக இருக்கும்படி நடவும்.

(4) கன்றின் நெற்று பாகத்தை மண்ணிலேயே இருக்கும்படிச் செய்யவும்.

(5) மழைக்காலத்தில் கன்றுகள் நடுவது நல்லது.

(6) காற்றில் அசையாமல் இருக்க ஒரு கோலினை நட்டு இணைத்துக் கட்டவும்.

(7) வெயில் காலத்தில் கன்றுகளைச் சுற்றி மறைப்புகள் வைத்தல் வேண்டும்.

உரமும் உரமிடுதலும்:

(1) மணற்பாங்கான நிலங்களில் அமோனியம் சல்பேட்டுக்கு பதிலாக 5 முதல் 7 கிலோ கடலை பிண்ணுக்கு இடுதல் வேண்டும்.

(2) அதே போல மூரியேட் ஆஃப் பொட்டாஷுக்கு பதிலாக ஒரு கன்றிற்கு 10 முதல் 15 கிலோ சாம்பல் இடவும்.

(3) சாம்பலையும், அமோனியம் சல்பேட்டையும் ஒரு போதும் ஒன்றாக கலக்கக் கூடாது.

(4) சாம்பல் இட்ட ஒரு மாதத்திற்கு பின் அமோனியம் சல்பேட் போடவும்.

(5) ஒரு கன்றுக்கு 50 கிலோ தொழுவுரம் இடவும்.

(6) உரமிடும் போது மண்ணில் ஈரம் இருப்பது நல்லது.

பயிர்ப் பாதுகாப்பு :

நாற்றங்காலில்.—சிவப்பு பேன்களால் இலைகள் பழுப்பு நிறமாகின்றன. இதனை தடுக்க ஒரு செடிக்கு 60 கிராம் கந்தகம் வீதம் தூவவும்.

செதில் பூச்சிகளால் சிற்றிலைகளின் சிறுபகுதிகளில் மஞ்சள் நிறம் அங்கங்கு ஏற்படலாம். இவைகளை அழிக்க பாராதியானும் தாமிர பூசண நாசினியும் கலந்து தெளிக்கவும்.

தென்னை மரக் கருவண்டு :

மரத்தின் குருத்து பாகத்தைப் பார்வை இட்டு வண்டு இருந்தால் கொக்கி கருவி கொண்டு எடுத்து விடவும். வண்டை வருமுன் காக்க சம அளவு மணலும், பி.எச்.சி. மருந்தும் கலந்து மட்டைகளின் அடிப்பாகத்தில் வைக்கவும்.

சிவப்புக்கூன் வண்டு:

பாதிக்கப்பட்டுள்ள பாகத்தை அப்புறப்படுத்தி அதில் பாராடைகுளோரோ பென்சைன் படிகத்துண்டுகள் அல்லது பைரோகோன் 1 சதவீதம் விடவும்.

தென்னை ஓலைப்புழு:

பாதித்துள்ள பாகத்தை வெட்டி எடுத்து அதோடு அப்பாகத்தை எரித்து பின்னர் 400 கிராம் கரையும் டி.டி.டீ.யை 25 காலன் தண்ணீரில் கலக்கி தெளிக்கவும்.

இலைப்புள்ளி நோய்:

இந்நோயினைத் தடுக்கும் பொருட்டு 1 சதவீதம் போர்டோ கலவை தெளிக்கவும். வேண்டிய உரமும், செய்யவேண்டிய முறைகளை கைக்கொண்டால் இதனை தடுக்கலாம்.

தட்டுக்காளான் நோய் :

மரத்தினை தனிப்படுத்த மரத்தைச் சுற்றி 4 அடி தள்ளி குழி எடுத்து ½ முதல் 1 கிலோ கந்தகத்தைப் புதிய மண்ணோடு கலந்து இடவும்.

எலிகள்.—மரங்களில் ஏறிச் செல்வதைத் தடுக்க இரும்பு வளைவுகள் அமைக்கவும். சிங்க் பாஸ்பைடு என்ற விஷப்பொருளை எலிப்பொறியில் வைத்து அழிக்கவும்.

விவசாயச் செய்திக் கதிர்

K. M. சுந்தரம், V. சினிவாசன்

விரிவிணைப் பிரிவு, விவசாயக் கல்லூரி, கோவை.

சிகப்பு வெண்டை—இது வீட்டு தோட்டத்திற்கு ஒரு அணி கலன்

சிகப்பு வெண்டை அழகுக்கும், சிக்கனத்துக்கும் வீட்டுத் தோட்டத்திற்கு உகந்ததுமான ரகம். இது பூசா சவானி என்ற வெண்டை ரகத்தைக்காட்டிலும் மிகவும் ருசியுள்ளதாயும் அதிக சத்துள்ளதாயும் உள்ளது. இது உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. இது நான்கு வாரங்களுக்குப் பின் காய்க்க ஆரம்பித்து தொடர்ந்து மேலும் ஐந்து வாரங்கள்வரை காய்கள் கொடுக்கும். இதன் காலம் சுமார் மூன்று மாதங்கள். ஒவ்வொரு செடியும் 24-லிருந்து 30 காய்கள் கொடுக்கும், அதன் எடை சுமார் 1 கிலோவிலிருந்து 1½ கிலோவரை இருக்கும். குறைந்த நிலப் பரப்பில் அதிக மகசூலைப்பெற இந்த ஜாதியைப் பயிரிடுங்கள். இது வீட்டுத் தோட்டத்திற்குதந்ததாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட சிறந்த ரகம். அதோடு தவருமல் அதிக பலன் கொடுக்கக்கூடிய உயர் ரக வெண்டை.

தஞ்சாவூர் பகுதியில் கரும்பு சாகுபடிக்கு ஏற்ற உர அளவுகள்

வடபாதி மங்கலத்தில் 1964—65-ல் நடத்திய சோதனையிலும், 1965—1966-ல் நடத்திய சோதனைகளின் மூலமும், கரும்புக்கு ஒரு எக்டேருக்கு 150 கிலோ தழைச் சத்துக்கு மேல் தேவையில்லையெனத் தெரிகிறது. தழைச்சத்தை இரண்டு பாகங்களாகப் பிரித்துப் போடுவது வழக்கம். முதலில் 45 நாட்களுக்குப் பிறகும், 95-120 நாட்களுக்குப் பின் இரண்டு பாகங்களாகப் பிரித்து போடுவது மற்றெல்லா முறைகளைப் போலவே சிறந்தது.

இலைகளிலிருந்து உண்பதற்கான புரதப் பொருள்

இலைகளிலிருந்து உண்ணக்கூடிய புரதப் பொருள்கள் தயாரிக்கலாம். உஷ்ணப் பிரதேசங்களில் விளையும் பல்வேறு செடிகளிலிருந்தும் நல்ல தரமான உணவுக்கேற்ற புரதப் பொருள்கள் தயாரிக்க முடியும் என்பது விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் செய்யப்பட்ட சோதனை மூலம் தெரியவருகிறது. பருப்பு வகை செடிகளும் சில புல் வகைகளும் இதற்கு மிக ஏற்றவைகளாகும். பருப்பு செடிகளிலும் நிரந்தரமாயுள்ள சில புல்களிலும் உண்ணக்கூடிய புரதப் பொருள்கள் தயாரிப்பதற்கு வழி உள்ளது.

அதை உணர்ந்துதானே என்னவோ நமது முன்னேர்கள் (கற்கால மனிதர்கள்) இலைகளையும் காய்ந்த சருகுகளையும் தின்று பசி பிணியினின்றும் விடுதலை தேடினர்கள் போலும். இந்த நூற்றுண்டில் நவீன விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் இலைகளை உண்ணும் புரத பொருளாக மாற்றி நாமும் கால்நடைகளும் ஒருவாறு பசியைப் போக்கிக்கொள்வதுடன் போஷாக்கை பெறுவோம் என்பது நிச்சயம்.

நாலாவது திட்டகாலத்தில், அந்த புரதப் பொருள் தயாரிக்க ஆகும் செலவு அதன் தரம் முதலியவற்றை அறியத் திட்டமிட்டுள்ளது. இதைத் தயாரிப்பதற்கு அத்தியாவசியமான கருவிகள் இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளது. இலைகளிலிருந்து உண்பதற்கான புரதத்தை செயல்முறையில் எல்லோரும் வாங்கக்கூடிய விலையில் தயாரிக்கலாம் என்பது தெரிகிறது.

புரதப் பொருளை இலையிலிருந்து எடுத்த பின்பு இலையிலிருந்த சத்தில் 50 சதவிகிதம் சக்கையில் இருக்கும். அந்த சக்கையானது கால் நடைத் தீவனம் தயாரிக்க சிறந்த கச்சா பொருளாகப் பயன்படுகிறது. தற்பொழுது தீவனம் தயாரிப்பதற்குத் தேவையான கச்சாப் பொருள் இல்லை. புரதப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலானது கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிலுக்கும் உதவி செய்கிறது. சக்கையை விற்பதினுல் புரதப் பொருள் தயாரிக்கும் செலவில் பாதியை சமாளிக்கலாம். அதனுல் புரதப் பொருளின் விலையும் குறையும்.

இந்த திட்டத்தின் வெற்றி, மனிதனுக்கும் கால் நடைகளுக்கும் சிறந்த வரப்பிரசாதமாகும். ஒரே குறியில் இரண்டு பெரும் சாதனைகள்.

புகையிலை உற்பத்தி பெருக தீவிர சாகுபடித்திட்டம்

கே. சப்தரிஷி, பி. எஸ்ஸி. (எஜி.), மாநில புகையிலை பெருக்க அலுவலர்,

பி. கருப்பண்ணன், பி. எஸ்ஸி. (எஜி.), தனி மாவட்ட விவசாய அலுவலர் (புகையிலை தீவிர சாகுபடித் திட்டம்), மேட்டுப்பாளையம்.

தமிழ் நாட்டில் புகையிலை சாகுபடி சுமார் 42,500 ஏக்கர் நிலத்தில் செய்யப்படுகிறது. மொத்தப் பரப்பளவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு கோவை மாவட்டத்தில் உள்ளது.

கோயமுத்தூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட தாலுகாக்களில் புகையிலை சாகுபடி பரவலான முறையில் நடைபெற்று வருகிறது.

தாலுகா	பரப்பளவு	உற்பத்தி (டன்னில்)
(1)	(2)	(3)
பல்லடம்	9,783	6,551
தாராபுரம்	5,643	3,779
அவனுசி	4,707	3,152
கோபி	5,022	3,336

தீவிர சாகுபடித் திட்டத்தின் நோக்கம்

புகையிலை உற்பத்தியையும் தரத்தையும் கணிசமான அளவில் அதிகரிப்பதே திட்டத்தின் நோக்கம். போதிய அளவில் இரசாயன உரங்கள் இடல், பயிர்ப் பாதுகாப்பு செய்தல், நல்ல விதை ஆகியவற்றால் இந்த நோக்கம் நிறைவேறும்படி செய்யப்படும். கடந்த சில ஆண்டுகளாகச் செய்யப்பட்ட பரிசோதனைகளின் முடிவாக புகையிலைக்கு 60 பவுண்டு நைட்ரஜன், 30 பவுண்டு மணிச்சத்து, 30 பவுண்டு பொட்டாசியம் போடுவது அதிக மகசூலை கொடுக்கிறது என்பது தெரிகிறது. இதை ஆதாரமாய்க் கொண்டு ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 500 பவுண்டு இரண்டாம் நம்பர் கலப்பு உரம் (12:6:6) இடுவதால் விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கிறது என்பதும் தெளிவாகிறது. இந்த முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு தவிர சாகுபடித் திட்டம் கோவை மாவட்டத்தில் அமுல் நடத்தப்பட்டது. இதனால் புகையிலையின் உற்பத்தியை சராசரி ஏக்கர் ஒன்றுக்கு அரை பாரம் (சுமார் 120 கிலோ) அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது.

புகையிலை தீவிர சாகுபடித் திட்டம் முதல் முதலாக அவனுசி தாலுகாவில் காரமடை வட்டாரத்திலும் கோபி தாலுகாவில் பவானிசாகர் வட்டாரத்திலும் 1964-65-ம் ஆண்டு அமுல் நடத்தப்பட்டது. அத் திட்டத்தின்படி ஒவ்வொரு வட்டாரத்திலும் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டது.

பயிர்ப் பாதுகாப்பு

உரம் இடுவதற்கு அடுத்தாற்போல பயிர்ப்பாதுகாப்பு முறைகள் புகையிலை விவசாயத்தில் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. நல்ல மகசூல் கிடைக்க புகையிலை விவசாயிகள் அவசியம் நவீன பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரிக்க வேண்டும். புகையிலை நாற்றங்காலில் தண்டழுகல் என்ற பூஞ்சாள அழுகல் நோய் ஏற்படுகிறது. புகையிலை நாற்றங்கால் நெருக்கமாக இருந்தாலும், வானம் மப்புமந்தாரமாக இருந்தாலும், இந்த நோய் வெகு விரைவில் பரவி நாற்றுகளுக்கு மிகுந்த சேதத்தை உண்டாக்குகிறது. இதைத் தடுக்க நாற்றுகள் பரவலாக இருக்க வேண்டும். இதற்கு குறைந்த அளவு விதை உபயோகிக்கவேண்டும். போர்டோ கலவை 0.5 சதவீதம் மருந்தைத் தெளிக்க வேண்டும். அத்துடன் நெமடோட் என்ற புழுக்களின் காரணமாக வேர் முடிச்சுகள் ஏற்பட்டு நாற்றுகள் மிகவும் பாதிக்கப்படுகிறது. இந்த நோய் வந்தால் வேறு இடத்தில் நாற்றுப் பாவவேண்டும். புதிய விதைகள் வாங்கி நாற்றுகள் போட வேண்டும். சில ஆண்டுகளுக்கு மாற்றுப் பயிர்கள் சாகுபடி செய்யவேண்டும்.

புகையிலையில் இலை வெட்டுப்புழு அசுவினி, பேன், வெட்டுக்கிளி, தண்டுப்புழு முதலிய பூச்சிகளுடன் (கருந்தண்டு நோய்), சாம்பல் நோய், புகையிலைப் புள்ளி நோய் முதலிய நோய்களும், புகையிலை சுருளை நோய் போன்ற வைரஸ் நோய்களும் அரோபேங்கி என்ற புல்லுருவியும் அதிகமாகக் காணப்படுகின்றன. இவைகளால் புகையிலை மகசூல் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. வைரஸ் நோய்களுக்கு மருந்து கிடையாது. ஆகையால் புதிய விதைகளைக் கொண்டு நாற்றுகள் விட வேண்டும். நோயால் பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி எரித்துவிட வேண்டும். காளான் என்ற புல்லுருவியை விதை உடைவதற்கு முன்பாக சுமார் மூன்று அங்குலம் உயரம் இருக்கும்பொழுது பறித்து எரித்து விட வேண்டும். மற்ற பூச்சி, பூஞ்சாள நோய்களைக் கட்டுப்படுத்த நான்கு முறையாவது மருந்து தெளிக்கவேண்டும்.

இந்தத் திட்டத்தின்கீழ் வேடசந்தூர் புகையிலை ஆராய்ச்சிப் பண்ணையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்க்கண்ட பொறுக்கு விதைகள் இந்தப் பகுதிகளில் விநியோகிக்கப் படுகின்றன. இந்தப் பொறுக்கு ரக விதையில் விவசாயி களின் விதையை விட அதிக மகசூல் கிடைக்கிறது.

115,119	வாழைக்கப்பல் வகை.
64	மொண்னே.
7	பெரியவிடமுகம்.
1	வட்டக்கப்பல்.

இத்திட்டம் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கடன் வசதி அளிக்கிறது. விவசாயிகள் தங்களுக்குத் தேவையான இரசாயன உரம், மருந்துகள் முதலிய சாதனங்களை எளிதில் கூட்டுறவு சங்கம் மூலமே பெறுகிறுர்கள்.

இத் திட்டத்தின்கீழ் 1964–65-ம் ஆண்டு கீழ்க்கண்ட வசதிகள் விவசாயிகளுக்கு அனுமதிக்கப்பட்டது.

புகையிலைக் கணக்கு

இந்தியா, புகையிலை விளை நிலப்பரப்பு உற்பத்தி இவற்றில் உலகத்தில் மூன்ருவது இடத்தையும், ஏற்றுமதியில் ஐந்தாவது இடத்தையும் பெறுகிறது. புகையிலை விவசாயத்தின் மூலம் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ. 40 கோடி வருமானம் கிடைக்கிறது. அந்நியச்செலாவணி மூலம் மத்திய அரசினருக்கு சுமார் 20 கோடி ரூபாய் வருமானமும் கிடைக்கிறது. புகையிலையை நம்பி வாழ்வோர் சுமார் 10 லட்சம் சாகுபடிகாரர்கள், சுமார் 7 லட்சம் தொழிலாளர்கள்.

		ரூ. பை.
(1)	கலப்பு உரம் நெம்பர் 2· 10 மூட்டை (400 கிலோ)	200·00
(2)	பூச்சி, பூஞ்சாள நோய் மருந்துகள் (அரை விலையில்)	25·00
(3)	புகையிலை சாகுபடிச் செலவு	275·00
	மொத்தம் ..	500·00

இந்தத் திடடத்தின்படி 1965–66-ம் ஆண்டு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 2,000 ஏக்கராவுடன் புதிதாக சத்திய மங்கலம், நம்பியூர் என்ற இரண்டு வட்டாரங்களையும் சேர்த்து மொத்தம் 4,000 எக்கர் புகையிலை சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது·

1966–67-ம் ஆண்டு கோபி தாலுகாவில் தூக்க நாயக்கன்பாளையம் வட்டாரமும், அவினுசி தாலுகாவில் அன்னூர் வட்டாரமும், பல்லடம் தாலுகாவில் உள்ள சுல் தான்பேட்டை வட்டாரமும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். ஆகவே, 1966–67-ம் வருட இறுதியில் மொத்தம் 6,000 எக்கர் புகையிலை சாகுபடிக்குக் கொண்டு வரப்படும். இந்தத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் வரை அமுல் நடத்த அரசினர் அனுமதி வழங்கியுள்ளனர். இதோடு திருப்பூரை தலைமை இடமாகக் கொண்டு ஒரு தனி மாவட்ட விவசாய அதிகாரியும் 1967–68 முதல் அமுல் நடத்த அனுமதி வழங்கியுள்ளனர்.

இத்திட்டத்தில் உள்ள வசதிகள்

விவசாயிகளுக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயி நபர் ஜாமீன் மூலம் அதிகத் தொகையாக ரூ. 2,000 வரையும்; நில அடமானத்தின் மூலம் ரூ. 5,000 வரை கடன் பெறலாம். ரூ. 135 பெறுமானமுள்ள 5 மூட்டை (40 கிலோ) இரண்டாம் நம்பர் கலப்பு உரமும், ஒரு மூட்டை அமோனியம் சல்பேட்நைட்ரேட் அல்லது 50 கிலோ யூரியா என்ற இரசாயன உரங்கள் விநியோகம் செய்கிறது. அரை விலையில் ரூ. 30 பெறுமானமுள்ள மருந்தை ரூ. 15-க்கு ஆறு பாட்டில் பாலிடால், பேரத்தியான், என்டிரின் போன்ற மருந்துகளும், ஒரு கிலோ காப்பர் பங்கிசைடு என்ற மருந்தும் விநியோகிக்கப்படுகிறது. ஆக மொத்தம் ரூ. 150-க்கு பொருட்களாகவும், மீதமுள்ள ரூ. 275 ரொக்கமாக சாகுபடிச் செலவுக்காக வழங்கப்படுகிறது. அத்துடன் பயிற்சிபெற்ற அரசாங்க ஊழியர்கள் ஒவ்வொரு விவசாயியையும் கிராமத்தில் நேரடியாகச் சந்தித்து நவீன விவசாய முறைகளை விளக்கி ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு பண்ணைத் திட்டம் தயார் செய்கிறுர்கள். இதன் மூலம் விவசாயிகள் முன்னேற்ற முறைகளை சாகுபடி காலத்திற்கு முன்பே தெரிந்துகொண்டு கடன் வசதிக்கேற்றவாறு புகையிலைச் சாகுபடியை நல்ல முறையில் செய்து உற்பத்தியையும், தரத்தையும் பெருக்க வசதி செய்கிறுர்கள். விவசாயத்திற்கு எல்லா உதவிகளையும் காலா காலத்திலும், கணிசமான அளவிலும் செய்ய கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய பாங்குகள், மத்திய வங்கி, விவசாய டிப்போ முதலிய ஸ்தாபனங்களுடன் அடிக்கடி தொடர்புகொண்டு காலா காலத்தில் உதவி அளிக்கப்படுகிறது.

1964–65-ம் ஆண்டில் இத்திட்டம் அமுல் நடத்தியதின் விளைவாக பவானிசாகர் வட்டாரத்தில், மகசூல் 1963–64-ம் ஆண்டு மகசூலைவிட 13·90 சதவீதம் அதிகமாகவும் காரமடை வட்டாரத்தில் 13·81 சதவீதம் அதிகமாகவும் கண்டுள்ளது.

கீழ்க்கண்ட அட்டவணையில் இந்தத் திட்டத்தின் அனுகூலங்களை தெரிந்து கொள்ளலாம்.

வட்டாரத்தின் பெயர்.	பண்ணைகளின் எண்ணிக்கை.	திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு (ஏக்கரில்).	1963—64 பதம் செய்யப்பட்ட புகையிலை மொத்த மகசூல். ட. கி.	1963—64 ஏக்கர் மகசூல். ட. கி.	1964—65 மொத்த மகசூல். ட. கி.	1964—65 ஏக்கர் மகசூல். ட. கி.	வித்தியாசம். மொத்த மகசூல். ட. கி.	வித்தியாசம். ஏக்கர் மகசூல். ட. கி.	1963—64-ம் ஆண்டை விட 1964-65-ம் ஆண்டின் அதிக விளைச்சலின் சத வீதம்.
பவானி சாகர்	293	459	298·588	0·650·51	330·093	0·719·37	31·505	0·68·86	13·90%
காரமடை	434	589	303·156	0·524·70	344·726	0·585·27	41·570	0·70·57	13·70%
மொத்தம்	727	1,048	601·744	0·582·61	674·819	0·652·32	73·075	0·69·72 (சராசரி)	13·81% (சராசரி)

திட்டத்தின் பலன்.

		ரூ.	பை.
1.	அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட 73·075 டன் புகையிலைக்கு மத்திய அரசினருக்கு கலால் வரி மூலம் கிலோ ஒன்றுக்கு ரூ. 1·98 வீதம்.	1,44,468	50
2.	அதிக உற்பத்தியின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைத்த வருமானம் கிலோவுக்கு ரூ. 1·50 வீதம் மதிப்பு.	1,09,612	50
3.	தீவிர சாகுபடியின் மூலம் ஏற்படும் செலவு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம்.	52,400	00
4.	நிகர லாபம்.	57,212	50
5.	இத் திட்டத்தின் மூலம் அதிகமான வரியும், விவசாயிகளின் அதிக இலாபமும் சேர்ந்து மொத்த வருமானம்.	2,01,681	00
6.	அரசாங்க சிப்பந்திகளின், சம்பள சில்லரை செலவினங்கள் முதலியன, பூச்சி மருந்துகள் மொத்த செலவு.	30,714	10
	இத் திட்டத்தினால் மொத்த நிகர லாபம்.	1,70,966	90

மேலே கண்ட புள்ளி விவரங்களின்படி அரசினர் மொத்தத்தில் இந்தத் திட்டத்திற்கு ரூ. 30,714 செலவு அளித்ததின் விளைவாக நாட்டிற்கு ரூ. 1,70,966·00 அதிக நிகர வருமானம் கிடைத்துள்ளது. மேற்கண்ட மொத்தச் செலவில் தமிழ்நாடு அரசினருடைய பங்கு ரூ. 15,357 மட்டும்தான். ஏனென்றால் இத் திட்டத்தின் 50 சதவீதச் செலவை மத்திய அரசினர் ஒத்துக்கொள்கிறார்கள். இவ்வாறு தனி விவசாயிகளுக்கும், மொத்தத்தில் நாட்டுக்கும் மிகுந்த பயன் தருகின்ற இந்தப் புகையிலை தீவிர சாகுபடித் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவது மிகவும் பொருந்தும். இத் திட்டத்தால் நன்மையடைய விவசாயிகள் முனைவார்களாக!

பொதுவாக புகையிலை சாகுபடிக்குப்பின் சோளம், ராகி, கம்பு போன்ற சிறுதானியப் பயிர்கள், பருத்தி போன்ற பயிர்களும் பயிர் செய்கிறார்கள். சாதாரணமாக புகையிலை இந்தப் பகுதியில் அக்டோபர் முதல் டிசம்பர் முடிய நடவு செய்யப்பட்டு 105 நாட்களுக்குமேல் 120 நாட்களில் அறுவடை செய்யப்படுகிறது. சாதாரணமாக சோளம், ராகி, கம்பு போன்ற உணவுப் பயிர்கள் புகையிலை அறுவடைக்குப்பின் சாகுபடி செய்தால் 20 முதல் 30 சதவீதம் அதிகமாகக் கிடைக்கிறது. மேலும் பருத்தி சாகுபடி நிலத்தில் இன்னும் ஒரு பயிர்தான் சாகுபடி செய்யமுடியும். ஆனால் புகையிலை சாகுபடி நிலத்தில் மேலும் இரண்டு உணவுப் பயிர்கள் சாகுபடி செய்வதுடன் அதிக மகசூலும் கிடைப்பதால், மொத்தத்தில் புகையிலை சாகுபடியால் விவசாயிகளுக்கு மிகவும் லாபம் இருக்கிறது. மண்ணின் வளமும் காப்பாற்றப்படுகிறது. ஆகையால் புகையிலை சாகுபடி மூலம் மறைமுகமாக உணவு உற்பத்தியை கணிசமான அளவில் அதிகப்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது. ஆகவே, புகையிலை ஒரு லாகிரி வஸ்துவாக இருந்தாலும், இது "உணவுப் பயிர்களின் உண்மை நண்பன்" என்று புலனாகிறது. ஆகையால் இந்த அனுபவத்தைக்கொண்டு இந்தத் திட்டத்தை முக்கியமாக புகையிலை சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் மேலும் விஸ்தரிக்கலாம். இதனால் விவசாயிகள் பல னடைவது மட்டுமின்றி அரசினருக்கும் பல இலட்சக் கணக்கான வருமானம் கலால் வரி மூலம் கிடைக்கிறது. உணவு உற்பத்தியும் 25 சதவீதம் அதிகம் கிடைக்கிறது.

பப்பாளி ஒரு பயனுள்ள பழம்

ஜே. எப். ஜார்ஜ், பி.எஸ்.சி. (விவ.) வானொலி விவசாய அலுவலர், சென்னை.
எச். எஸ். வேலாயுதம், பி.எஸ்.சி. (விவ.), வானொலி உதவியாளர், சென்னை.

பப்பாளி மிக குறுகிய காலத்தில் அதிக பலனைக் கொடுக்கும் ஒரு பழவர்க்கமாகும். எக்கர் ஒன்றுக்கு ஒரு ஆண்டில் சராசரி விளைச்சல் 10,000 ராத்தல் (4,500 கிலோ). சில தோட்டங்களில் 43,000 ராத்தல் விளைச்சலும் கிடைத்துள்ளது.

இப்பழத்தில் உயிர்ச்சத்து (வைட்டமின்கள்) 'ஏ' 'சி' நிறைந்துள்ளன. ஆனால் சில தப்பபிப்ராயங்கள் நிலவி வருவதாலும் சிறப்பைப் புரிந்து கொள்ளாததாலும் இப் பழத்தை விரும்பி சாப்பிடுவதில்லை. நன்றாய்ப் பழுத்த பழம் மிகவும் ருசியுள்ளது. இதன் காய்கள் சமையலுக்குச் சிறந்தவை. தவிர ஜாம், ஜெல்லி போன்ற பலவித பண்டங்களும் இதிலிருந்து தயார் செய்யலாம். இளங் காய்களிலிருந்து எடுக்கப்படும் பாலில் பெபெயின் எனும் பொருள் நிறைந்துள்ளது. இது மருத்துவத்துறையில் மிகவும் உபயோகமானது. 1943–44–ம் ஆண்டில் தென் இந்தியாவில் பரவிய காலரா வியாதியைப் போக்கும் மருந்தை சென்னையிலுள்ள கிண்டி "கிங் இன்ஸ்டிடியூட்" (King Institute) டில் பெபெயினிலிருந்துதான் செய்தார்கள் என்றால் பப்பாளியின் பெருமைதான் என்னே!

பப்பாளி சாகுபடி

மண்.—பலதரப்பட்ட மண் வகைகளிலும் சீதோஷண நிலைகளிலும் பப்பாளி வளருமென்றாலும், ஆற்றுப்படுகை நிலங்கள், மணல் கலந்த திடல்கள், வீட்டுக் கொல்லைப் புறம் முதலியவை, சாகுபடிக்கேற்ற இடங்களாகும். நல்ல வடிகால் வசதி மிகமிக அவசியம். இல்லையேல் அடித்தண்டில் அழுகல் நோய் கண்டு மரங்கள் மடிந்து விடும்.

நாற்றங்கால் தயாரிப்பும் நடவும்

தோட்டத்தில் விதைகளை நேரடியாக ஊன்றலாமென்றாலும் நாற்று விட்டு நடுவதுதான் சிறந்தது, இலாபகரமானது. நாற்றுவிட ஜூன் மாதம் முதல் நவம்பர் வரை தக்க பருவமாகும். உயர்ந்த பாத்திகளிலோ அல்லது மண் தொட்டிகளிலோ நாற்று தயாரிக்கலாம். விதைகள் எடுத்தவுடனே நட்டால் நல்ல முளைப்பு கிடைக்கும். 30 நாட்களில் செடி 3/4 அல்லது 1 அடி உயரம் வளர்ந்திருக்கும். அப்போது அவைகளை எடுத்து நடவு செய்யலாம். சில இடங்களில் 50 நாள் முதல் 75 நாட்கள் வரை நாற்றுக்களை நடுகிறார்கள். நடவுக்கு முன் நாற்றுகளின் கீழ்ப்பாக இலைகளை கிள்ளி எடுத்து விடவேண்டும். நாற்று பிடுங்கும் போது அவைகளின் வேருடன் கொஞ்சம் மண்ணையும் சேர்த்து எடுத்து நட்டால் செடி காய்ந்து போகாமல் சீக்கிரமாகப் பச்சை கொள்ளும்.

நடவு :

நிலத்தை முதலில் நன்றாக உழுத பின் நடுவதற்கு 2' 2' 2' குழிகள் 8 அடிக்கு ஒன்றாக வெட்டி இக்குழிகளில் நன்றாய் பக்குவப்படுத்திய மண்ணும் 20–25 ராத்தல் கம்போஸ்டு எருவும் போடவேண்டும். சாயங்கால வேளையில் நாற்றுகளை குழிக்கு 4 நாற்றுகள் வீதம் ஒன்றுக்கொன்று ஒரு அடி இடைவெளி இருக்கும்படி நட்டு, உடனே தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவை வளர்ந்து பூ விட்டதும், 10 முதல் 20 பெண் மரங்களுக்கு ஒரு ஆண் மரம் வீதம் மகரந்த சேர்க்கைக்காக விட்டுவிட்டு, மற்ற ஆண் மரங்கள் முழுவதையும் எடுத்துவிடவேண்டும். ஒவ்வொரு குழியிலும் ஒரு வீரியமாக வளரும் ஒரு பெண் செடியை மட்டும் விட்டுவைக்க வேண்டும். இந்த முறையில் எக்கருக்கு 600 பப்பாளி மரங்கள் நடலாம்

பின்செய் நேர்த்தி

நட்ட முதல் மூன்று மாதங்களில் ஒரு தரம் களையெடுக்கவும். மழை இல்லாத காலங்களில் தவறாமல் வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

உரமிடுதல்

ஒவ்வொரு மரத்திற்கும் அரை கிலோ அமோனியம் சல்பேட், ஒரு கிலோ சூப்பர், அரை கிலோ பொட்டாஷ் ஆகிய மூன்றையும் கலந்து 6 மாதங்களுக்கு ஒருமுறை உரமிடவும்.

நடவான 5–6 மாதங்களில் பூ விட ஆரம்பிக்கும். 9–10 மாதத்தில் பழம் பறிக்கலாம். குளிர் காலம் தவிர மற்றெல்லாக் காலங்களிலும் தொடர்ந்து பழம் கொடுக்கும். முதல் வருடம் செடி ஒன்று 40 பழங்கள் கொடுக்கும். இந்த மரங்களை 3 வருடங்கள் வரை வைத்திருக்கலாம். ஒவ்வொரு மரமும் 3 வருடங்களில் 120 முதல் 130 வரை பழங்கள் கொடுக்கும். ஆகவே எக்கரில் மகசூல் 72,000 ராத்தல் வரை (சுமார் 24,000 பழங்கள்) கிடைக்கும்.

பப்பாளி நாற்று நட்டபின் அத்தோட்டத்தில் எட்டு மாதங்கள் வரை மிளகாய், வெங்காயம், தக்காளி, கீரைகள் போன்ற காய்கறிகளை ஊடுபயிராகச் சாகுபடி செய்யலாம்.

''ராஞ்சி'' ''வாஷிங்டன்'' ''ஹனிடியூ'' கோ-1, என்னும் பப்பாளி வகைகள் சிறந்தவை.

கோ. 1 பப்பாளி ரகம்

இந்த ரகம் நடுத்தர உயரமுள்ளது. சுமார் 7½ அடி உயரம். 6 மாதத்திற்குள் பூ விட்டு மொத்தம் 320 தினஙகளில் முதல் பலனுக்கு வந்துவிடுகிறது. இதன் முதல் பலன் தரை மட்டத்திலிருந்து 2½ அடிக்குள்ளாகவே கிடைக்கிறது. காயின் உருவம் உருண்டையாகவும் அடிப்பாகத்தில் சற்று தட்டையாகவும இருக்கும். சராசரி எடை 3 ராத்தல். பழத்தில் ஒருவித கெட்ட வாடையும் கிடையாது.

பெப்பெயின் தயாரிக்கும் முறை

நன்ருகத் திரண்டு பருத்த இளங் காய்களிலிருந்துதான் பால் எடுக்கப்படுகிறது. காயின் மேல் சுமார் 1/8 அங்குல ஆழத்திற்கு நான்கு, ஐந்து இடங்களில் பிளேடு போன்ற கூருன கத்தியிஞல் கீறிவிட வேண்டும். கீறிய இடங்களிருந்து பால் கசிந்து வந்து உறைந்து விடும். உறைந்த பாலே சுரண்டி எடுக்கவேண்டும். இவ்வாறு 3 அல்லது 4 நாட்களுக்கு ஒருமுறை காயைக் கீறிவிட்டுப் பாலேச் சேர்ககலாம். சேகரித்த உடனே உறைந்த பாலே உலர்த்த வேண்டும். உலர்த்தாத பால் தரங்கெட்டு விடும். இவ்வாறு உலர்த்திய பப்பாளிப் பால் காற்று நுழையாத



2½ அடி உயரத்திலேயே காய்த்துக் குலுங்கும் கோ 1. பப்பாளி

பெப்பெயின்

பப்பாளி காயிலிருந்து ''பெப்பெயின்'' என்னும் பொருள் தயாரிக்கப்படுகிறது. ''பெப்பெயின்'' ஒரு விலே யுயர்ந்த பண்டம். ஐக்கிய அமெரிக்காவில் பெப்பெயினுக்கு கிராக்கி அதிகம். அரை கிலோ பெப்பெயின் விலே ஐந்து டாலர், புரதசத்துப் பொருட்களே எளிதில் செறித்து பதப்படுத்தும் சக்தி வாய்ந்த தாவரப்பொருள் ''பெப்பெயின்''. மாமிசத்தைப் பக்குவம் செய்வற்கும் 'பீர்' என்னும் சாராய வகை புளிப்பெடுக்காதிருப்பதற்கும், தோல் பதனிடுவற்கும், பட்டுநூல் தயாரிப்பு முதலியவற்றிற்கும் பெப்பெயின் பயன்படுகிறது.

படி டின்களில் அடைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பப்பாளி ஓர் சிறந்த பழமரம். இதன் சத்து வாய்ந்த ருசியான பழங்கள் ஆரோக்கியத்திற்கு உகந்தவை. குறைந்த காலத்தில் நிறைந்த மகசூல் கொடுக்கக்கூடியவை.

சிறிய இடமாக இருந்தாலும் இப்பயனுள்ள பழமரத்தை ஒவ்வொரு வீட்டிலும் நடலாம். தோட்டக்கால் பயிராகவும் சாகுபடி செய்து நல்ல பயனடையலாம். பப்பாளி பழத்தின் மேலுள்ள காரணமில்லா வெறுப்பை விட்டு விட்டு யாவரும் இதைப் பயிரிட்டு சாப்பிட முன்வர வேண்டும்.

கலப்பு வீரிய மக்காச் சோளம் பயிரிடும் முறை

(விஸ்தரிப்பு இயக்குனரகம், புது தில்லி)

மக்காச் சோளத்தில் அதிக மகசூல் பெற கலப்பு வீரிய (இரு பிறவி) மக்காச் சோளம் பயிரிடுங்கள்.

தமிழ் நாட்டுக்கு உகந்தவகை "தக்காண ஹைபிரிட்" மக்காச் சோளம்.

இந்தப் பயிரின் இலைகள் அகலமானவை, கரும் பச்சை நிறமுள்ளவை; தண்டு தடிமனாக இருப்பதால் பயிர் தலை சாயாது. பறவைகள் இந்த சோளத்துக்கு அதிகம் பாதகம் விளைவிக்காது. தானியமணிய ஆழ்ந்த மஞ்சள் நிறமுள்ளதாகவும், கெட்டியாகவும், பெரிய தாகவும் இருக்கும். *

பயிர் சாம்பல் நோயை எதிர்க்கக்கூடியது. இலை புள்ளி நோய், துரு நோய் இவைகளையும் எதிர்க்க வல்லது. குருத்து பூச்சியையும் எதிர்க்கவல்லது.

பயிரின் வயதும் 100 தினங்கள்தான்.

தென்னிந்திய சீதோஷ்ணத்துக்குத் தக்கபடி நன்கு பரீக்ஷிக்கப்பட்டு எங்களால் நேரிடையாகத் தயாரிக்கப்பட்ட பலவித உயர்ந்த ஜாதி

முட்டைகோஸ், நூல்கோல், பீட்ரூட், கேரட், காலிப்ளவர், குடமிளகாய்

உலகப் பிரசித்திப்பெற்ற சிறந்த ருசி, குறைந்த விதைக்குழி, பருத்த சதை கொண்ட பலவித கவர்ச்சிகரமான

தக்காளி

மற்றும் இதர வெளிநாட்டு காய்கறி விதைகள், எக்காலத்துக்கும் தகுதியான நோய் அணுகாத, அதிக மகசூல் தரும் மிக உயர்ந்த ஜாதி பச்சை நிற

வெண்டை

பெரிய, சதை பருத்த, ருசிகரமான அதிசய ஜாதி

கொத்தவரை

அதிக மகசூல், சிறந்த ருசி, கவர்ச்சி நிறம், வடிவம், குறைந்த விதை முதலிய பல விசேஷ குணங்கள் கொண்ட

கத்தரி ரகங்கள்

இதர பலவித முள்ளங்கி, மிளகாய், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி, கீரை வகைகள், மா, எலுமிச்சை, கொய்யா, சபோடா போன்ற பழச் செடிகள், தென்னை ரகங்கள், பூச்சி மருந்துகள், தோட்டக் கருவிகள், ஸ்ப்ரேயர்கள், களை நாசினிகள் முதலிய எல்லாவற்றுக்கும் சிறந்த நம்பிக்கை வாய்ந்த இடம்:

ராஜா பண்ணைத் தோட்டம்

2, வைத்தியராமப்பர் தெரு (ஹிந்தி பிரசாரசபை அருகில்),

தியாகராயநகர் : : சென்னை-17.

தந்தி : RAJSEED போன் : 42262

* படம் : இரண்டாவது அட்டை, உள்பக்கம்.

பயிர் சாகுபடி

இரும்புக் கலப்பையால் நிலத்தை உழுது கட்டிகளை உடைத்து நிலத்தை பண்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 15–20 வண்டி தொழு எரு அடிக்க வேண்டும்.

பாத்திகள் கட்டி பாசன வசதிகள் செய்யவும்.

உரம்

விதைக்கும் போது ரசாயன உரம் போட வேண்டும். கலப்பு வீரிய விதைகள் உரத்தால் அதிக பலனளிப்பவை. விதையை விட்டு 2-3 அங்குலம் தள்ளி விதைக்கு கீழ் 1-2 அங்குலம் புதையும்படி ஏக்கருக்கு 12 கிலோ நைட்ரஜனும் (60 கிலோ அமோனியம் ஸல்பேட் அல்லது 26 கிலோ யூரியா) 24 கிலோ பாஸ்பாரிக் அமிலம் (150 கிலோ சூப்பர் பாஸ்பேட்டு) 15 கிலோ பொடாஷ் (30 கிலோ மூரியேட் ஆப் பொடாஷ்) இடவும்.

விதையும் விதைப்பும்

விதைக்கு விதை எட்டு அங்குலம் விட்டு விதைத்தல் வேண்டும். ஏக்கருக்கு சுமார் 6 கிலோ விதை தேவை. விதையை கண்டபேர்களிடமிருந்து வாங்கவேண்டாம். பதிவு செய்யப்பெற்ற நற்சாட்சி பத்திரம் பெற்ற விதை விற்பனையாளரிடமிருந்தே வாங்குங்கள். ஏக்கருக்கு முற்றிய செடிகள் 20,000-க்கு மேல் இருக்கக் கூடாது.

விதைத்த 45-ம் நாளைக்கு பிறகு 12 கிலோ நைட்ரஜன் (60 கிலோ அமோனியம் சல்பேட்டு அல்லது 26 கிலோ யூரியா) வை பயிர் 18 அங்குலம் வளர்ந்ததும் போடவும். மறுபடி ஒரு முறை இதே அளவு நைட்ரஜன் உரத்தை பயிர் குஞ்சம் கட்டும் போது போட வேண்டும். உரத்தை எப்போதும் வரிசைகளுக்கு நடுவில் 1 அங்குலம் $1\frac{1}{2}$ அங்குல ஆழத்தில் வைக்கவும்.

பாசனம்

விதைத்தஉடன் பாசனம் செய்ய வேண்டும். பயிர் வாடாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். 10–15 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்யவும். கொண்டை கட்டும் தருணத்தில் பயிருக்கு நிரம்பத் தண்ணீர் வேண்டியிருக்கும்.

இடையுழவு

விதைத்து இரண்டு மூன்று வாரத்தில் இடையுழவு செய்யவும். களையில்லாமல் கவனித்துக் கொள்ளவும்

ஒரு அங்குலம் அல்லது இரண்டு அங்குல ஆழத்துக்கு மேல் பலுகை செலுத்தக் கூடாது.

பயிர் பாதுகாப்பு

பயிர் நான்கு அங்குல உயரம் இருக்கையில் டிடிட அல்லது என்டிரின் தூவவேண்டும். பத்து நாளைக்கு ஒரு தடவை இம்மாதிரி மருந்தடிக்கவேண்டும். பறவைகள், நரிகள், குரங்குகள் இவை பயிரை நாசம் செய்யாமல் கவனித்துக் கொள்ளவும்.

அறுவடை

கொண்டையைச் சுற்றியுள்ள இலைகள் வாடினதும் அதாவது இளம் பச்சை நிறத்திலிருந்து இளம் பழுப்பு நிறத்துக்கு மாறியதும், அறுவடை செய்யவும்.

நாட்டு மக்காச் சோளம் ஏக்கருக்கு 28 மணு கொடுத்த இடத்தில் கலப்பு வீரிய மக்காச் சோளம் தகுந்த எருவும் போட்டு பாசனமும் செய்தால் ஏக்கருக்கு சுமார் 53 மணு கொடுக்கும்.

கலப்பு வீரிய சோளத்தை உரிய உரம் பாசனம் பயிர் காப்புடன் பயிரிட்டால் ரூ. 250 வரை அதிக வருமானம் கிடைக்கும். தவிர சோளத்தை அடுத்து சாகுபடியாகும் பயிரும் நன்கு விளையும், முக்கியமாக கவனிக்கவேண்டியது. உங்கள் பயிரின் விதையை மறுபடி விதைக்கக்கூடாது. புதிதாக வீரிய விதை வாங்கியே விதைக்கவும்.

கரும்பு விளைச்சல் போட்டி
மாநில முதல் பரிசு

மாநில கரும்பு விளைச்சல் போட்டியில் 1964–65-ம் ஆண்டுக்கான பரிசை, திருச்சி மாவட்டம் திருச்சி தாலுகாவைச் சேர்ந்த திரு. எஸ். கந்தசாமி உடையார் பெறுகிறார். கரும்பில் அவர் எடுத்திருக்கும் மகசூல் ஏக்கருக்கு 111·722 டன். இது ஒரு மகத்தான சாதனையாகும். ''காவேரி சுகர்ஸ்'' ஆலைப் பகுதியில் வரும் மேலக்கல் கண்டார்கோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் திரு. எஸ். கந்தசாமி உடையார்

ஏக்கருக்கு 111.722 டன் என்ற உயர்ந்த சாதனை தமிழகத்தில் கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ள எல்லா விவசாயிகளின் உள்ளத்திலும் உள்ள " மேலும் அதிகம் விளைவிப்போம் " என்கிற ஆசைக்கு நம்பிக்கையும் ஊக்கமும் அளிக்கும்.

எஸ். கந்தசாமி உடையாரை இந்த நல்ல சாதனைக்காகப் பாராட்டுகிறோம்.

எஸ். கந்தசாமி உடையார்,
மேலக்கல் கண்டார்கோட்டை,
திருச்சி தாலுக்கா,
திருச்சிராப்பள்ளி ஜில்லா.

கரும்பு விளைச்சல்
ஏக்கருக்கு
111·722 டன்.

போன் :
24558, 34251 & 63746

தந்தி :
'VENPALCO'

கஜலக்ஷ்மி கலப்பு உரங்கள்

GOVERNMENT ORDER NO. 3353

மிகச் சிறந்த N. P. K. 'கஜலக்ஷ்மி மார்க்' கலப்பு உரங்களை எல்லாவிதமான பயிர்கள், காய்கறி வகைகள், புஷ்பச் செடிகள், தோட்டப்பயிர்கள் முதலியவைகளுக்கு உபயோகித்து அதிக லாபம் அடையுங்கள்.

5 கிலோ, 2 கிலோ பாக்கெட்டுகளிலும் கிடைக்கும்.

மிகவும் உபயோககரமான சகலவித நவீன விவசாயக் கருவிகளும் கிடைக்கும்.

V. வேணுகோபால் பிள்ளை & Co. & இராமன்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்
2/27, பிராட்வே :: சென்னை-1.

கிளைகள் :
திருவள்ளூர், பொன்னேரி, காரனோடை & விழுப்புரம்

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

உயர்ந்த மகசூல் தரும் களர் நெல்

(எஸ். சடையப்பன், எஸ். டி. சீனிவாசன், பேராவூரணி.)

தமிழ்நாட்டில் நெல் சாகுபடியாகும் 59 லட்சம் எக்கரில் சுமார் இரண்டு லட்சம் எக்கர் வரை களராகவோ அல்லது உவராகவோ ஆங்காங்கு மாநிலமெங்கும் பரவிக் கிடக்கின்றன. எஸ். ஆர். 26–பி என்னும் ஒருவகை நெல்லைத்தவிர மற்ற நெல் ரகங்கள் இத்தகைய நிலத்தன்மையைச் சரிவரத் தாங்கக்கூடியவையாயில்லை. புதியதாக வெளியிடப்பட்டிருக்கும் பீ. வீ. ஆர்–1 என்ற பொறுக்குவிதை இக்குறையைப் போக்கும். பீ. வீ. ஆர். 1, பேராவூரணியில் உள்ள களர் நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் உண்டாக்கப்பட்டது.

பேராவூரணி ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள களர் நிலங்களில் பீ. வீ. ஆர்–1-ன் சந்ததி எக்கருக்கு 1,060 கிலோ நெல் கொடுத்தது. இது எஸ். ஆர். 26–பி-யைவிட 19 . 8 % அதிகம், மாநிலத்தில் மற்றும்பல களர் நிலங்களில் பரிசோதிக்கப்பட்டதில் இந்தப் புதிய நெல் ரகம் அதிக மகசூல் கொடுத்திருக்கிறது. மிதமான களர்த்தன்மையுள்ள இடங்களில் இந்நெல் எக்கருக்கு 1,485 வரை மகசூல் கொடுத்திருக்கிறது.

ஆலை அறைவையில் வீ வீ. ஆர்–1-க்கு சேதாரம் குறைவு. எஸ். ஆர். 26–பியைவிட அரிசி 4 சதவிகிதம் அதிகம் கிடைக்கிறது. வியாபாரத் துறையிலும் எஸ். ஆர். 26–பி-யைவிட பெரிதும் விரும்பப்படுகிறது. மாநிலத்தில் பல இடங்களில் அமைந்துள்ள மிதமான களர் நிலங்களுக்கேற்றதாயுள்ளது. ஜூலை மாத விதைப்பில் 145 நாட்களில் அறுவடைக்கு வருகிறது, இதில் மகசூலும் அதிகம். பிந்தியபட்ட மகசூல் சிறிது குறைகிறது, ஆனால் 135 நாட்களிலேயே அறுவடைக்கு வருகிறது. மாநிலத்தில் எல்லா இடங்களுக்கும் எஸ். ஆர். 26–பி-யைவிட எல்லா வகைகளிலும் ஏற்றதாகயிருக்கிறது பீ. வீ. ஆர்.

ஆகவே களர் நிலங்களில் பயிர் செய்ய பீ. வீ. ஆர்–1 நெல் ரகத்தை தேர்ந்தெடுங்கள்.

ஏர்முனை

சா. சண்முகபாண்டியன், சாக்கோட்டை.

ஏர்பின்னே உலகெல்லாம் என்றே சொல்வோம் !
எம்மறைக்கும் பொதுமறையாம் குறளும் சொல்லும்

ஏர்தானே உழைக்கின்ற மக்கள் செல்வம்
இதன்முனையால் கிறுகின்ற இடமெல் லாம்பொன் !

ஏர்தன்னைத் தோளின்மேல் சுமந்து செல்வோன்
இயங்குகின்ற பாரினையும் சுமந்து செல்வான்

ஏர்தானே வறுமையெனும் பேயைக் கொல்லும்
பேர்முனைக்கோர் துப்பாக்கி போல ஆகும்.

பாரென்னும் இளமங்கை ஏரால் நன்கு
பண்பட்டுப் பட்டு எழில் பூத்ததாவாள் !

சீராகக் கருவுற்றுச் சிந்தை அள்ளும்
செம்பயிரைக் குழந்தையாய் ஈன்றெடுப்பாள்.

வார்ப்புற்ற ஏரின்முனை வாழ்க! செல்வம்
வாய்த்திடவே, வேண்டுமென வாழ்த்துரைப்போம்

ஊர்மக்கள் வாழ்வுதனைத் தழைக்கச் செய்யும்
ஒப்பில்லா ஏர்முனைக்குச்சீர் கொடுப்போம்.

கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம், கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

கே.—கம்போஸ்டு எருக் குழியில் மரத்தூளை சேர்க்கலாகாது என்று மேழிச் செல்வத்தில் படித்து இருக்கிறேன். ஆனால் கோழிக் கூண்டிலிருந்து (Deeplitre system) மரத்தூளுடன் கூடிய கழிச்சலை எப்படி உபயோகிப்பது ? விளக்கவும்.

(என். நந்தி, கேத்தி)

ப.—மரத்தூளில் அதிக அளவு கரிமப் பொருள் இருப்பதால் நேரிடையாக கம்போஸ்டு உரத்துடன் கலந்து உபயோகிக்கக் கூடாது. மரத்தூளை மற்ற கழிவு பொருளுடன் நன்கு கலந்து கம்போஸ்டு குழியில் போட்டு மக்க வைத்த பிறகு எருவாக உபயோகிக்கலாம். மரத்தூள் ஈரத்தை உறிஞ்சும் தன்மை அதிகம் உள்ளதால் அதை தொழுவங்களிலும், கோழி கூண்டுகளிலும் தரையில் தூவிவைத்து கழிவுப் பொருள்களுடன் சேர்த்து எடுத்து கம்போஸ்டு குழிகளிலிட்டு மக்கவைத்த பிறகு எருவாக உபயோகிக்கலாம்.

கே.—பருத்தி விதையில் எந்த சமயத்தில் அக்ரசான் மருந்து கலந்து விதைக்க வேண்டும், எப்படி ?

ப.—பருத்தியில் வரும் கருங்கிளை நோய் விதை மூலம் பரவும் வியாதியாக இருப்பதால் விதைகளை மருந்துடன் முன் கூட்டியே கலக்க வேண்டும். ஆனால் பருத்தி விதையை சாணிப்பால், செம்மண் முதலியவைகளுடன் பூசி விதைக்கும் பழக்கம் விவசாயிகளிடையே இருந்து வருகிறது. அதனால் அக்ரசான் மருந்து கலப்பதை செம்மண் பூச்சுக்கு பிறகு விதைகளுடன் விதை மருந்து கலக்கும் கருவியின் உதவியால் கலந்து விதைப்பது வியாதியை உண்டாக்கும் பூசணங்களை அறவே அழிக்க வழிகோலுகிறது. அக்ரசான் மருந்து கலப்பதை விதைக்கும் முன்பு செய்யவேண்டிய காரியமாக வைத்துக் கொள்ளலாம். ஒரு அவுன்ஸ் அக்ரசான் அல்லது சிரசான் மருந்து 15 ராத்தல் பருத்தி விதையுடன் கலக்கவும்.

விதை மருந்து கலந்து விதைத்து பிறகும் சில சமயங்களில் பருத்தி காட்டில் கருங்கிளை நோய் தென்பட்டால் 1 சதவீத போர்டோ கலவை மாதம் இருமுறை தெளிக்கவேண்டும். அல்லது ஸ்றெப்டோ மைசின் (Streptomycin Sulphate) Clinical 100ppm மருந்தை மாதம் இருமுறை தெளிக்கவேண்டும். பருத்தி விதைத்து 40 அல்லது 50 நாட்களிலிருந்து மருந்து அடிக்க ஆரம்பிக்கலாம்.

கே.—உயரமாக வளரக்கூடிய "தக்காளி செடி" விதைகளை எங்கு வாங்கலாம் ? வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் அத்தகைய விதைகள் கிடையா. அதனால் எப்படி வாங்கலாம் ?

(அ. அப்பாஸ், கமுதி).

ப.—காய்கறி விதைகள் சர்க்கார் விவசாய டிப்போ மூலமாகவும், விதை உற்பத்தி நர்சரிகாரர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். அருகில் உள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலர் தேவையான விதைகளை வரவழைத்து சப்ளை செய்ய ஏற்பாடு செய்வார்.

அல்லது காய்கறி உற்பத்தி உதவியாளர்கள் அருகாமையில் இருந்தால் அவர்களை அணுகவும். அல்லது காய்கறி நிபுணர், விவசாய கல்லூரி, கோவை-3 என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

கே.—கத்தரி செடியில் கள்ளிப்பூச்சி அல்லது மாவு பூச்சி தொல்லை அதிகமாக இருக்கிறது. இதனால் காய்ப்பு இல்லாமல் செடிகள் வாடி இறக்கின்றன. என்ன செய்யலாம் ?

(நேருதாசன், முகவை).

ப.—கத்தரி சாகுபடி காலத்தில் மாவுப் பூச்சிகள் இலைகளின் அடிபாகங்களிலும், இளம் தண்டு பாகங்களிலும் தாக்கி செடியின் சாற்றை உறிஞ்சி சாப்பிடுவதால் செடிகள் வாடி இறக்க நேரிடும். இதற்கு முன்

கூட்டியே பராத்தியான் மருந்தை 1 அவுன்ஸ் 6½ காலன் தண்ணீரில் (0·05%) கலந்து தெளிக்கவும். இளம் செடிகளாக இருக்கும்பொழுது மருந்து அடிப்பது நலம். கத்தரி காய்க்கும் காலத்தில் பூச்சிகள் தென்பட்டால், காய்களை பரித்தவுடன் மேல்சொன்ன பராத்தியான் (0·05%) மருந்து அடிக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு முறை மீண்டும் மருந்து அடித்தால் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். காய்ப்பு ஓய்ந்துபோகும் காலத்தில் செடிகளை பூச்சி தாக்கினால் செடிகளை அறவே அப்புறப்படுத்தி எரித்து விடுவது நலம்.

கே.—" ஜினப் " என்ற பூசண கொல்லி மருந்து எந்த அளவில் மருந்து அடிக்கலாம் ?

(விவசாயி, திருக்கழிகுன்றம்).

ப.—" ஜினப் " (zinab) என்ற பூசண கொல்லி மருந்தை 1½ ராத்தல் (¾kg) மருந்துக்கு 100 காலன் (450 லிட்டர்) தண்ணீர் வீதம் கலந்து பயிர் பூசண நோய்களுக்கு உபயோகப்படுத்தலாம்.

கே.—கரும்பு விவசாயத்தில் பலர் சோகைகளை இருமுறை அடித்து சுத்தப்படுத்துகிறார்கள். அப்படிச் செய்தால் கரும்பு வளர்ச்சியடையவும் காற்று புகுவதால் கரும்பு பருமனாகவும் ஏதுவாகிறது என்று கூறுகிறார்கள். இது உண்மையா? சோகை அடிப்பது நல்லதா?

எம். வடிவேலு, தர்மாத்துப்பட்டி,
மதுரை மாவட்டம்.

ப.—நன்றாக முற்றி தனியாக விரியும் தருவாயில் உள்ள தோகைகளை எடுத்துவிடுவதால் கரும்பு எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் கரும்புடன் ஒட்டியுள்ள பச்சைத் தோகைகளை எடுக்கக் கூடாது.

முற்றிய தோகைகளை எடுத்துவிடுவது, கரும்பு முற்றுவதற்கும் பருமனாவதற்கும் எவ்விதத்திலும் உதவுவதாக இதுவரை தெரியவில்லை.

கே.—கரும்பில் எத்தனை ரகங்கள் உண்டு? இதில் வெல்லத்திற்கு சிறந்தது எது? யாரை அணுகவேண்டும்? விலாசம் தேவை.

பி. கந்தசாமி,
கீழ்னுமந்தி, வட ஆற்காடு மாவட்டம்.

ப.—கரும்பில் நல்ல மகசூல் கொடுக்கக்கூடிய ரகங்கள் கோ. 419, கோ. 449, கோ. 740 கோ. 658, கோ. 853 ஆகும். கோ. 449, கோ. 658, ரகங்கள் அதிக சர்க்கரைச் சத்து பொருந்தியவை. கோ. 658 கார்த்திகை–மார்கழி மாதங்களில் அதிக சர்க்கரை பொருந்தி முன் பட்டத்தில் நடுவதற்கு சிறந்தது. கோ. 853 என்ற புதிய ரகம் பின்பட்டத்தில் சித்திரை, வைகாசி மாதங்களில் நடுவதற்கு அதிக சர்க்கரை சத்தும் மகசூலும் கொடுக்கக்கூடியது.

வெல்லத் தயாரிப்பிற்கு கோ. 419, கோ. 449, கோ. 740 ரகங்கள் சிறந்தவை.

உங்களுக்கு அருகாமையிலுள்ள குடியாத்தம் கரும்பு அபிவிருத்தி உதவியாளரை அல்லது விவசாய விஸ்தரிப்பு அதிகாரியை அணுகவும்.

கே: கரும்பை வெட்டிய பின், கட்டைகளை மட்டம் தட்டுதல் என்று மம்பட்டியால் நீட்டிய கட்டைகளை வெட்டி விடுகிறார்கள். இதனால் கரும்பின் பயிர்கள் ஊக்கமாகவும் அதிகமாக வெடித்தும் வருகிறது என்று பலர் நம்புகிறார்கள். கட்டைகளை மட்டம் தட்டுதல் அவசியமா?

எம். வடிவேலு, மதுரை மாவட்டம்.

ப.—கரும்பை வெட்டிய பின் கட்டைகளை மட்டம்தட்டுவதால் நில மட்டத்திற்கு கீழிருந்து கிளைகள் நிறைய புடைத்து வருவதற்கும் நிலத்தில் நன்றாக ஊன்றி நிற்கவும் ஏதுவாகிறது.

கே.—நான் விவசாயத்தில் சீரிய முறையில் படித்துத் தெரிந்து கொள்வதற்கு என்னென்ன புத்தகங்கள் வாங்கிப் படிக்கலாம்? அதே காலத்தில் பொது மக்களுக்கும் எடுத்துச் சொல்லலாம்?

பி. கந்தசாமி, கீழ்னுமந்தி.

ப.—வி. டி. சுப்பையா முதலியார் இயற்றியுள்ள "தென்னிந்திய சாகுபடிக் குறிப்புகள்" என்ற புத்தகத்தைப் படிக்கவும். விவசாயச் செய்தித் துறையினரால் வெளியிடப்படும் மாதாந்திரப் பத்திரிகையான மேழிச் செல்வத்தை தொடர்ந்து படிக்கவும். உங்களுடைய வட்டார விவசாய விஸ்தரிப்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவ்வப்போது விவசாயம் பற்றிய இலவச வெளியீடுகளையும் படிக்கலாம். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இரவு 7–30 மணியிலிருந்து 8 மணிவரை ஒலிபரப்பப்படும் விவசாய செய்திகளை ரேடியோ மன்றம் மூலம் கேட்கலாம்.

கே.—மேழிச் செல்வம் விவசாயக் கருத்தரங்கு சிறப்பு மலர் ஐப்பசி மாத பின் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர் இறைக்கும் சாதனம் (low lift pump) பற்றிய (1) வேலைத்திறன் (2) கிடைக்குமிடம் (3) விலை விபரம் முதலியன முடிந்தால் விளக்க படங்களுடன் தெளிவுபடுத்தவும்.

என். நந்தி, நீலகிரி

ப.—குறைந்த ஆழத்திற்கு நீர் இறைக்கும் பம்பு (low lift pump) "விவசாய அபிவிருத்தி சொசைட்டி, நைனி, அலகாபாத் என்ற ஸ்தாபனத்தால்செய்யப்பட்டது. இது இரண்டு கைப்பிடிகள் பொருத்தப்படட இரு மனிதர்கள் வேலை செய்யக்கூடிய அளவில் உள்ளது. இதைக்கொண்டு நாள் ஒன்றுக்கு ½ எக்கர் நீர் பாய்ச்சலாம். 16 முதல் 18 அடிவரை நீர் இறைக்கப் பயன்படும். இதன் சுமாரான விலை ரூ. 180. இதற்கு "Agricultural Development Society, Naini P. O., Allahabad District, Uttar Pradesh" என்ற முகவரிக்கு எழுதவும்.

நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்

(முதல் வெளியீடு)

இலாபத்துடன் கூடிய பத்திரமான முதலீடு

வகைகள்

ரூ.10 100 1,000

10 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைக்கும் தொகை

ரூ.18 180 1,800

எல்லா தபால் நிலையங்களிலும் கிடைக்கும்

ஒரு புதிய வரிசை

நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்

(முதல் வெளியீடு)

பாங்க் வரிசை

இதே நன்மைகளுடன்

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

மற்றும் அதன் உப பாங்குகளின் எல்லா

கிளைகளிலும் கிடைக்கும்

DA-69/159

தேசீய சேமிப்பு நிறுவனம்

விவசாய வேலைகளின் மாத அட்டவணை (Calender of Operation)

உருளைக்கிழங்குப் பயிர்

மாதம்	வேலையின் விபரம்
1. ஜனவரி .. (மார்கழி—தை)	2-ம் போக உருளைக்கிழங்குப் பயிர் அறுவடை பசுந்தாள் உரவிதை (பக்வீட்) விதைப்பு கம்போஸ்ட் உரம் தயாரிப்பு—விதை விற்பனை.
2. பிப்ரவரி .. (தை—மாசி)	2-ம் போக உருளைக்கிழங்குப்பயிர் அறுவடை பசுந்தாள் உரவிதை (பக்வீக்) விதைப்பு—கம்போஸ்டு உரம்தயாரிப்பு—விதைவிற்பனை.
3. மார்ச் .. (மாசி—பங்குனி)	விதை சேகரித்தல் (உதகமண்டலம்) மேட்டுப்பாளையம், பெங்களூரிலிருந்து வாங்கி வருதல், முதல் போகச் சாகுபடிக்கு நிலம் தயாரித்தல் விதைகளை கார்பன்-மை-சல்பேட் வைத்து முளைப்பிற்குத் தயார் படுத்தல்—பசுந்தாள் உரப்பயிரை மடக்கி உழுதல்—கம்போஸ்டு உரமிடல்.
4. ஏப்ரல் .. (பங்குனி—சித்திரை)	இரசாயன உரமிடல்-முதல் போக உருளைக்கிழங்கு விதைப்பு-பசுந்தாள் உரப்பயிரை மடக்கி உழுதல்-கம்போஸ்டு உரமிடல்.
5. மே .. (சித்திரை—வைகாசி)	இரசாயன உரமிடல்—முதல் போக உருளைக்கிழங்கு விதைப்பு–உருளைக்கிழங்கு பயிரைத் தாக்கும் பின் பருவ இலைக் கருகல் நோய் தடுப்பிற்கு டைதேன், பைட்டலான் மருந்து அடித்தல் வெட்டுப் புழுவை ஒழிக்க டி. டி. டீ. மருந்து தூவுதல். களை எடுத்தல், செடிகளுக்கு மண் அணைத்தல்.
6. ஜூன் .. (வைகாசி—ஆனி)	உருளைக்கிழங்கு செடிகளுக்கு டைதேன், பைட்டலான் மருந்தடித்தல், வெட்டுப்புழுவிற்கு டி. டி. டீ. மருந்து தூவுதல் 2–ம் முறை களை எடுத்தல், மண் அணைத்தலும், வேலி ஓரங்களில் பசுந்தழை தரும் போத்துகள் (முள் முருங்கை நடவு.
7. ஜூலை .. (ஆனி—ஆடி)	முதல் போக உருளைக்கிழங்குப் பயிர் அறுவடை—விதை விற்பனை 2–ம் போகப் பயிருக்கு நிலம் தயாரித்தல்.
8. ஆகஸ்டு .. (ஆடி—ஆவணி	முதல் போக உருளைக்கிழங்குப் பயிர் அறுவடை 2-ம் போக பயிருக்கு நிலம் தயாரித்தல்—கம்போஸ்டு உரமிடல், இரசாயன உரமிடல் 2–ம் உருளைக்கிழங்கு விதைப்பு.
9. செப்டம்பர் .. (ஆவணி—புரட்டாசி)	பசுந்தாள் உரப்பயிர் விதைப்பு விதை சேகரித்தல்—நிலம் தயாரித்தல். 2–ம் போகப் பயிருக்கு கம்போஸ்ட் உரமிடல், இரசாயன உரமிடல்—2–ம் போக உருளைக்கிழங்கு விதைப்பு.
10. அக்டோபர் .. (புரட்டாசி-ஐப்பசி)	நிலம் தயாரித்தல்—இரசாயன உரமிடல்—2-ம் போக உருளைக் கிழங்கு விதைப்பு.
11. நவம்பர் (ஐப்பசி—கார்த்திகை)	இரசாயன உரமிடல், 2–ம்போக உருளைக்கிழங்கு விதைப்பு 2–ம் போக உருளைக்கிழங்குப் பயிரை தாக்கும் முன் பருவ இலைக் கருகல் நோய் தடுப்பிற்கு மருந்தடித்தல்— வெட்டுப்புழுவை ஒழிக்க மருந்து தூவுதல் களையெடுத்தல் — செடிகளுக்கு மண் அணைத்தல்.
12. டிசம்பர் .. (கார்த்திகை—மார்கழி)	2–ம் போகப் பயிருக்கு மருந்தடித்தல்—வெட்டுப் புழுவை ஒழிக்க டி. டி. டீ. மருந்து தூவுதல்—களையெடுத்தல்–மண் அணைத்தல், வேலி ஓரங்களில் பசுந்தழை தரும் போத்துகள் (முள்முருங்கை) நடவு.



வானொலிச் செய்திகள்

"வானொலியும் விவசாயமும்"

"விவசாயச் செய்திகளை ரேடியோ மூலம் தீவிரமாக ஒலிபரப்ப தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் என்ற திட்டம் திருச்சி வானொலி நிலையத்தில் 7—6—66-ந்தேதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பநாளில் நிலைய நிர்வாகி திரு. எம். எஸ். கோபால் அவர்கள் ஆற்றிய உரையை இங்கு பிரசுரிக்கிறோம். நிலைய நிர்வாகி அவர்களின் தீவிரமும் உற்சாகமும் எல்லார் மனதையும் ஊடுறுவட்டும்."

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடிச் சென்றார் அமரகவி பாரதி. கவியின் குரல் இன்று எவ்வளவு உண்மையாக ஒலிக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். உழவும் தொழிலும் ஓங்கவேண்டும் என்று எங்கும் பேசப்படுகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சி, மக்களின் வாழ்வு, வளம் யாவும் அந்த நாட்டின் உழவும் தொழிலும் ஓங்குவதைப் பொறுத்துள்ளது. எனவே உழவையும் தொழிலையும் வாழ்த்தி வணங்குகிறோம்.

நாட்டில் இன்று நிலவும் பற்றுக்குறையும் பஞ்சமும் பசியும், நம் விவசாயத்தில் முன்னேற்றம் காணாத காரணத்தால், விவசாயத்தில் போதிய கருத்தும் கவனமும் செலுத்தாத காரணத்தால் என்று கருதப்படுகிறது. எனவேதான் உணவு தானியத்துக்கு அந்நிய நாடுகளை நம்பி வாழும் அவல நிலை ஏற்பட்டது.

இந்தச் சீர்கேடான நிலை இன்னும் நீடிக்கக் கூடாது என்று உணர்ந்து மத்திய மாநில அரசினர் விவசாயத் துறையில் பல ஆக்க வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளனர். விவசாயத்தில் தன்னிறைவு காண விவசாய முறைகளை விஞ்ஞான அடிப்படையில் கையாள பல வழிவகைகளை ஆராய்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். வளர்ந்துவரும் ஜனத்தொகைக்கு ஈடாக, நமக்குத் தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்க நமது விவசாயத்தில் நவீன விஞ்ஞான முறைகள் ஆக்கம் பெற வேண்டும். பழமையில் ஊறிக்கிடக்கும் நம் விவசாயிகளிடம் விஞ்ஞான நோக்கு தோன்றவேண்டும். விஞ்ஞானக் கண்களோடு அவர்கள் விவசாயத்தை பார்க்க வேண்டும், ஈடுபடவேண்டும். புதிய சாகுபடி முறைகள் ரசாயன உரங்கள் அதிக விளைச்சல் தரும் புதிய ரக விதைகள், இயந்திரக் கலப்பைகள், மண் பரிசோதனை, பூச்சி மருந்துகள் இவற்றை உபயோகிக்கும் விஞ்ஞான முறைகள் பற்றி நம் விவசாயிகள் போதிய அறிவு பெற வேண்டும். விஞ்ஞான முறைகளைக் கையாண்டு அதிக விளைச்சல் அடைய முடியும் என்ற நம்பிக்கையைத் தூண்ட வேண்டும். அந்த நம்பிக்கை ஏற்பட போதிய பிரச்சாரம் வேண்டும். வெறும் பிரச்சாரம் மட்டுமல்ல, விவசாய விருத்திகளும் அதன்மூலம் நாட்டின் நல்வாழ்வுக்கும் மேற்கொள்ளும் ஒரு நற்பணியுமாகும். இந்த மகத்தான பணியை விவசாய இலாகாவினரும் வானொலி நிலையமும் ஏற்கெனவே செய்துவருகிறார்கள். விவசாயிகளிடம் நேரில் பேசியும் வானொலி நிகழ்ச்சிகளின் மூலமும் அபிவிருத்தியை எடுத்துரைத்து வருகிறார்கள். எனினும், அறிந்தவர்கள் சிலர், அறியாதவர் பலர். அவர்கள் யாவருக்கும் மேலும் மேலும் வளர்ந்து வரும் விஞ்ஞான விவசாய அறிவை அள்ளி வழங்க வழி வகை செய்ய வேண்டும். இந்த அரும்பணியை நமது வானொலி நிலையங்கள் விவசாய இலாகாவின் உதவியோடும், ஒத்துழைப் போடும் சிறந்த முறையில் ஆற்ற இன்று நல்ல வாய்ப்பும் வசதியும் பெற்றுள்ளன.

வானொலி ஒரு சக்தி வாய்ந்த சாதனம். பாமரர், பண்டிதர், முதியோர், இளைஞர் யாவரையும் ஒருங்கே தன்பால் ஈர்க்கும் ஒரு அரிய சாதனம். எழுத்தறிவு இல்லாத ஏழை மக்கள் மிகுந்த நம் நாட்டில் கல்வி அறிவை எளிதில் புகட்டுவதற்குப் பயன்படும் சாதனம். நம் நாட்டில் விவசாயப் பெருமக்களில் பெரும்பாலோர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். எனவே அவர்களுக்கு நவீன விவசாய முறைகளைப் போதிக்க வானொலியை நல்ல முறையில் பயன்படுத்தலாம். இதை அறிந்தே பல ஆண்டுகளாக வானொலியில் நம் விவசாயிகளுக்கான தனி நிகழ்ச்சிகள் இடம் பெற்று நாள்தோறும் ஒலிப்பரப்பாகி வருகின்றன. இந்த நிகழ்ச்சிகளை இன்னும் சீரிய முறையில் காலத்துக்கேற்ப, விவசாயத்தில் இன்று காணும் விஞ்ஞான மாறுதல்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு மாற்றி அமைத்து ஒலிபரப்புத் திட்டங்கள் வகுத்துள்ளனர் மத்திய சர்க்கார்.

இவற்றில் ஒன்றுதான் தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் (Farm and Home Unit for Intensive Agriculture Broadcasts) இத்திட்டம் ஜூன் 7-ந்தேதி முதல் இந்தியாவில் பத்து நிலையங் களில் இயங்கி வருகிறது. இந்த பத்து நிலையங்களில் ஒன்று திருச்சி வானொலி நிலையம். திருச்சி நிலையத்தில் செயல்பட்டுவரும் தீவிர விவசாய ஒலிப்பரப்புத்திட்டத்தின் துவக்க விழா, தென்னகத்தில் நெற்களஞ்சியமான தஞ்சையில் ஜூன் மாதம் 7-ந் தேதி நடைபெற்றது. தமிழக விவசாயத்துறை அமைச்சர் P. கக்கன் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்கள்.

இத்திட்டம் ஒரு முக்கூட்டு அடிப்படையில் இயங்கி வருகிறது.

1. வானொலி நிலையத்தினர், (2) விவசாய இலாகாவினர், (3) விவசாயிகள் இம்முத்தரப்பினரும் திட்டத்தில் பங்கு கொள்கிறார்கள். விவசாய இலாகா நிபுணர்கள் தீவிர விவசாயத்துக்கு வேண்டிய குறிப்புகளையும், தகவல்களையும் விவசாய முறைகளையும் ஆலோசனைகளையும் அவ்வப்பொழுது வானொலி நிலையத்துக்கு அனுப்புகிறார்கள். அவற்றைத் தொகுத்து நிகழ்ச்சிகளாக அமைத்து விவசாயிகளுக்குத் தக்க தருணத்தில் வழங்குகிறது வானொலி நிலையம். விவரங்கள் விவசாயிகளுக்கு விரைவில் கிடைக்கும்பொருட்டு, வானொலி நிலையத்திலேயே விவசாயப் பயிற்சியும் அனுபவமும் பெற்ற விவசாய இலாகா அதிகாரிகள் திட்டத்தின் கீழ் பணி புரிகிறார்கள். இவர்கள் விவசாயிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களுடைய பிரச்னைகளையும் தேவைகளையும் அனுபவங்களையும் அறிந்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை அளிக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு விஞ்ஞான அறிவு வழங்குவதோடுமட்டும் நின்றுவிடாது. அன்றாட விவசாயத் துக்குத் தேவையான தகவல்களையும் அறிவித்து வருகிறார்கள். சுருங்கக்கூறின், விவசாயி தன் விவசாயத்தை யும் வீட்டையும் பாதுகாத்துப் பராமரித்து வர உதவுகிறது இத்திட்டம். திட்டம் வெற்றி பெறுவது இதில் பங்குகொள்ளும் முத்தரப்பினரும் முன் வந்து செயலாற்றுவதைப் பொறுத்துள்ளது. ஒருவர் தேவையை மற்றவர் உணர்ந்து பணி ஆற்றினால் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு நற்பயன் தரும் என்பது நமது நம்பிக்கை. நாட்டின் ஜீவநாடி விவசாயம். விவசாயத்தின் இன்றைய நிலையை உணர்ந்து நாடு தன்னிறைவு பெறுவதற்கு நாம் யாவரும் ஒற்றுமை மனப்பான்மையோடும் தியாக உணர்ச்சியோடும் உழைப்போமாயின் உலகம் போற்றும் ஒப்பற்ற பாரத சமுதாயத்தை உருவாக்குவோம் என்பதில் ஐயமில்லை. இந்த அரும் பணியில் விவசாயப் பெருமக்களுக்குப் பெரும் பங்கு உண்டு. வாழ்க விவசாயி ! வளர்க விவசாயம் !

தீவனப் பயிர், புல்களின் விதைகள் எங்கு கிடைக்கின்றன ?

ஆதாரம் : தாவர இயல் நிபுணர், விவசாயக் கல்லூரி, கோவை அவர்களின் கடித எண் கே. 2. 1498/66 4-6-66.

விதைப் பொருள்.	விதை கிடைக்குமிடம்.
	கோ. 11 சோளம்
விதை ..	சிறுதானிய நிபுணர், விவசாயக் கல்லூரி, கோயமுத்தூர்-3.
	மக்காச் சோளம்
விதை ..	சோளம் விளையும் மாநில விதைப் பண்ணைகள். மேற்பார்வையாளர், மத்தியப் பண்ணை, விவசாயக் கல்லூரி, கோயமுத்தூர்-3.
	தியோசினட்
விதை ..	மேற்பார்வையாளர், கால்நடை ஆராய்ச்சிப்பண்ணை, ஹோசூர் போஸ்ட், தர்மபுரி மாவட்டம்.
	கினிப்புல்
வேர்க்கட்டைகள் ..	மேற்பார்வையாளர், மத்தியப் பண்ணை, விவசாயக் கல்லூரி, கோவை-3.
	நகராட்சி மலக்கழிவு நீர்த் தோட்டம், கோவை, மதுரை, சென்னை. இன்னும் விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள்.
	நேப்பியர், கம்பு நேப்பியர் ஹைபிரிட்டு
,, ..	மேற்பார்வையாளர், மத்தியப் பண்ணை, விவசாயக் கல்லூரி, கோவை. மலக்கழிவு நீர்த் தோட்டம், நகராட்சி, மதுரை, சென்னை இன்னும் விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள்.
	நீர்ப்புல்
வேர்க்கட்டை ..	மேற்பார்வையாளர், மத்தியப் பண்ணை, விவசாயக் கல்லூரி, கோவை, மலக்கழிவு நீர்த் தோட்டம், நகராட்சி, மதுரை, சென்னை இன்னும் விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள்.
	புளு பவ்வல்
விதைகள் அல்லது கட்டைகள்.	மேற்பார்வையாளர், விவசாய ஆராய்சசிப் பண்ணை, பவானி சாகர், கோவை மாவட்டம்.
	கொழுக்கட்டை
விதை ..	இன்ஸ்பெக்டர், கீ வில்லேஜ் சென்ட்டர் தாராபுரம், மாவட்ட கால்நடைப் பண்ணைகள்; மேற்பாவையாளர், மத்திய பண்ணை, விவசாய கல்லூரி, கோவை.
	குதிரைமசால்
விதை ..	கோவை மாவட்டத்தில் உள்ள விவசாய விஸ்தரிப்பாளர்கள், கீ வில்லேஜ் இன்ஸ்பெக்டர், உடுமலைப்பேட்டை.

அன்புடையீர்,

குருவை சாகுபடிக்காகத் தண்ணீர் திறந்துவிடப் படுமோ, விடப்படாதோவென்று விவசாயிகள் ஐயப்பட்டுக் கொண்டிருந்தனர். இந்த ஏக்கம் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமின்றி அங்கு விளையும் நெல்லை உணவாகக் கொள்ளும் அனைவருக்குமே இருக்கத்தான் செய்தது. மேட்டூர் தேக்கத்தில் நீர்மட்டம் குறைவாக இருந்தபோதிலும் நமது அரசினர் மிகவும் தைரியத்துடன் பாசனத்திற்கென, அணையின் மதகுகளைத் திறந்து விட்டிருக்கின்றனர். மிகவும் அருமையாகக் கிடைத் திருக்கும் தண்ணீரைக் கொஞ்சமும் வீணாக்காமல் உபயோகப்படுத்தி, நிலத்தில் பயிர் ஏற்றுவது ஒவ்வொரு விவசாயப் பெருமகனின் கடமையாகும்.

சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலம் ஒரு சில செண்டுகளேயானாலும், அது தரிசாக இருக்கும்படி விட்டுவிடக்கூடாது. "தனி ஒருவனுக்குணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று வீரமுழக்க மிட்டார் பாரதியார். ஆகவே உணவு உற்பத்தியில் உங்கள் பங்கென்ன என்பதை ஆராய்ந்து இருக்கும் வசதிகளைக்கொண்டே சிறந்த முறையில் அதிக விவசாய உற்பத்தி செய்வதில் நீங்கள் முற்படவேண்டும்.

உங்களுக்கு நினைவூட்டும் வகையிலும், அவசியமான பல விவசாய விஷயங்களைப் பற்றியும் நாள்தோறும் வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டு வருகிறது. இந்த ஒலிபரப்புகளைத் தவறாமல் கேட்க வேண்டியதன் அவசியத்தை சென்ற மலரிலேயே உங்களைப் பரிந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். பல்வேறு பயிர்களின் திருந்திய சாகுபடி முறைகளைப் பற்றியும், அவற்றில் தோன்றக்கூடிய பூச்சி நோய்களை ஒழிப்பது குறித்தும் பேச்சுக்களாகவும் சம்பாஷணைகளாகவும் ஒலி பரப்புவதோடு மட்டுமல்லாமல் விவசாய அன்பர்களின் அனுபவங்களும் ஒலிபரப்பப்படுகின்றன.

தாமதமாக பயிர் செய்யப்படும்போது "பட்டகாலிலே படுவதுபோல்" பூச்சிகளாலும் வியாதிகளாலும் அதிகப் படியான கஷ்டம் ஏற்படலாம். பயிர்களில் தற்போது காணப்படும் அல்லது எதிர்பார்க்கப்படும் பூச்சி அல்லது நோய்களைப் பற்றியும் அவற்றை ஒழிக்க எந்தெந்த மருந்துகள் எந்தெந்த அளவில் உபயோகிக்க வேண்டுமென்பதைப் பற்றியும் தெளிவாக வானொலியில் அடிக்கடி ஒலிப்பரப்பப்பட்டு வருகிறது. பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரிப்பதில் கவனக்குறைவு ஏற்படாதவாறு, பூச்சி, வியாதிகள் வரும்வரை காத்திராமல் முன்னேற்பாடாகவே மருந்து தெளிக்கவேண்டும்.

எருவிடுதல் எரினும் நன்று என்பதை யாவரும் அறிவோம்; ஆனால் எரு சிபார்சு செய்யப்படும் அளவில் குறையாமல் காலாகாலத்தே பயிருக்குக் கிடைக்கச் செய்தால்தான் நல்ல பலன் அடையமுடியும். முக்கியமாக ஆடுதுறை 27 போன்ற உயர் விளைச்சல் ரகங்களுக்கு போதிய உரம் வைத்தால்தான் நல்ல விளைச்சல் கிடைக்கும்.

விசை டிரில்லர்

ஆடி மாத (ஜூலை–ஆகஸ்ட் 1966) மேழிச்செல்வம் இதழில் இரண்டாவது அட்டையின் உட்பக்கத்தில் முழு அளவில் இதே விசை டிரில்லர் படத்தைப் பார்த்திருப் பீர்கள். **இந்த விசை டிரில்லரைத் தயாரித்தவர்கள் சென்னை வண்ணாரப்பேட்டையில் உள்ள அரசினர் விவசாயப் பொறியியல் ஒர்க் ஷாப்பைச் சேர்ந்த பொறியியலாளர்கள் ஆவர்.** ஆடி மாத இதழில் இப்படத்தின்கீழ் "கோயமுத்தூர் விவசாயக் கல்லூரிக்குச் சேர்ந்த பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவினர் தயாரித்தது" என்று தவறுதலாகப் போடப்பட்டுவிட்டது. இப்பிழை யைத் திருத்திக்கொள்ளவும்.



முழுதும் நமது பொருள்களையும் நமது பொறியியலா ளர்களையும் கொண்டு விசை டிரில்லர்கள் தயாரிக்கும் முன்னோடித் திட்டம் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் தேதிய அரசாங்க ஆணை எண் 2860-ன்படி வண்ணாரப்பேட்டையிலுள்ள அரசினர் விவசாய பொறி யியல் ஒர்க் ஷாப்பில் ஆரம்பிக்கப்பட்டது. அம்முன்னோடித் திட்டத்தின் விளைவாக முதலில் இந்த டிரில்லர் உருவாகி யுள்ளது. நிலங்களில் இது எவ்வாறு வேலை செய்யும் என்ற சோதனைகளும் செய்யப்படுகிறது.

வெற்றிகரமாக இந்த விசை டிரில்லர் வேலை செய்வது விவசாயிகளுக்கு நன்மை. ஏனெனில், மேலும் அதிகப் படியான டிரில்லர்களை எளிதில் உருவாக்கி விவசாயி களுக்கு உதவலாம். இந்த மிகுந்த பயனுடைய டிரில்லரை அமைத்து உருவாக்கிய வண்ணாரப்பேட்டை விவசாயப் பொறியியலாளர்களைப் பாராட்டுகிறோம்.

—ஆசிரியர்.

எவ்வளவு குறைந்த நிலமானாலும் அதிக அளவில் உற்பத்தி செய்யக்கூடியவை காய்கறிகளே. ஒரே ஒரு சதுர அடி இடமிருந்தாலும் ஒரு சுரை அல்லது அவரை செடி வளர்க்க முடியும். வீட்டில் வீணாகும் கழிவுநீரைக் கொண்டே காய்கறிச் செடிகளுக்கு வேண்டிய ஈரம் கொடுக்கலாம். மாடி வீடுகளில் குடியிருந்தாலும், தொட்டிகளிலும் பெட்டிகளிலும் செடிகளை வளர்க்கலாம். சிறிதளவு முயற்சிதான் தேவை. கிராமங்களிலும், நகரங்களிலும், ஒவ்வொரு வீட்டிலும் காய்கறி உற்பத்தி செய்யப்பட்டால் உணவு பற்றுக்குறை என்ற சொல்லுக்கே இடமிருக்காது.

உணவு உற்பத்தியை எல்லா துறைகளிலும் அபிவிருத்தி செய்தல் நம் மனித சமுதாயத்திற்குச் செய்யும் சிறந்த தொண்டு ஆகும். விவசாயிகளுக்காக ஒலி பரப்புகள் இந்த அரும்பெரும் சேவையில் முன்னணியில் நிற்கிறது.

நீங்கள் அனைவரும் ஒலிபரப்புகளைக் கேட்டு பயனடையும்படி மீண்டும் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் சேவையை நாடும்,

ஜா. பே. ஜார்ஜ்.

வானொலி விவசாய அலுவலர், சென்னை.

சென்ற மாதம் வானொலியில் நீங்கள் கேட்ட விவசாய உரைகளில் நினைவு வைக்கவேண்டிய விபரங்கள்

வறட்சியான பகுதிகளுக்கு திருந்திய சாகுபடி முறைகள்

S. குழந்தைசாமி (விரிவுரையாளர், விவசாயக் கல்லூரி, கோவை) அவர்களின் 8—7—66-ந் தேதிய உரையின் சுருக்கம்.

எங்கெல்லாம் ஆண்டு ஒன்றுக்கு 20 அங்குலத்திற்குக் குறைவான மழை கிடைக்கிறதோ அந்தப் பகுதிகளில் செய்யப்பட்டு வரும் விவசாயம் அல்லது சாகுபடி, வறட்சிப் பகுதி விவசாயமாகும்.

கிடைக்கும் குறைந்த மழை ஈரத்தைப் பாதுகாத்து வைக்க, வறட்சிப் பிரதேசங்களிலுள்ள அதன் சரிவுத் தன்மைக்குத் தக்கபடி சமஉயர வரப்புகள் (Contour Bunds) அமைத்துக் கொள்ள வேண்டும். சரிவுத் தன்மை மிகவும் குறைவாக உள்ள இடங்களில் சரிவுக்குக் குறுக்காக அல்லது எதிராக உழவு செய்தல், பயிரிடுதல் (Contour cultivation) முறையைப் பின்பற்றுதல் வேண்டும். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கனமான கலப்பையைக் கொண்டு கோடைக் காலத்தில் ஆழமாக உறவு செய்தல் நலமாகும்.

வறட்சிப் பிரதேச சாகுபடி நிலங்களுக்கும் எக்கர் ஒன்றுக்கு குறைந்தது 5 வண்டி நன்றாக மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரத்தை, விதை விதைக்கு முன் போட்டு நிலத்தில் நன்றாகக் கலக்கும்படி உழுது விட வேண்டும். எங்கெல்லாம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 25 அங்குல மழையும் அதற்கு மேலும் பெய்கிறதோ அங்கெல்லாம் எக்கர் ஒன்றுக்கு 20 ராத்தல் தழைச் சத்தைக் கொடுக்கக் கூடிய செயற்கை உரமாகிய யூரியா அல்லது அமோனியம் சல்பேட் போன்ற இரசாயன உரத்தை மானுவாரிச் சாகுபடி நிலத்தில் விதை விதைக்குமுன் போட்டு கம்பு, சோளம், பருத்தி போன்ற பயிர்களைச் சாகுபடி செய்தால் அதன் மூலம் நல்ல பலன் கிடைக்கிறது என்று சமீப ஆராய்ச்சியால் திட்டவட்டமாகத் தெரியவந்தது.

இந்நிலங்களிலும் இலாபகரமான ஒரு பயிர்ச் சுழற்சி முறையைப் பின்பற்றுவது மிக அவசியமாகிறது. உதாரணமாக பருத்தி பயிர் செய்த நிலத்தில் அடுத்த ஆண்டிலும் பருத்தியை பயிர் செய்யாமல் சோளம், கம்பு, அல்லது கடலை பயிரிட்டு அதற்கடுத்த ஆண்டில் பருத்தியை மீண்டும் பயிர் செய்வதால் நிலவளம் பாதுகாக்கப்படுகிறது. கலப்புப் பயிர் செய்வதாலும் நிலவளம் பாதிக்கப்படுவதில்லை.

வறட்சிப் பிரதேசங்களுக்கு வறட்சியைத் தாங்கக்கூடிய பொறுக்கு ரக வித்துக்களையே உபயோகிக்க வேண்டும். உதாரணமாக சோளத்திற்கு கோ. 19-ம், கோ. 20-ம், கே. 3 என்னும் கோயில்பட்டி ரகமும் உகந்தவை யாகும். இதுபோன்ற இதர பயிர்வித்துக்களும் உள்ளன. வறட்சிப் பிராந்தியங்களில் பொறுக்கு வித்துக்களை எப்போதும் வரிசையாகவும் இடைவெளி சற்று அதிகமாகவும் விட்டு பயிர் செய்தல் முக்கியம். வரிசையாக விதைப்பதற்கு கொர்ரு விதைக்கலப்பை அல்லது விதை விதைக்கும் கருவியை உபயோகிக்கலாம்.

பயிரை வரிசை வரிசையாக விதைத்த பின் அந்த நிலத்தை 5 முதல் 10 செண்ட் விஸ்தீரணமுள்ள பாத்திகளாக அமைத்து விட்டால் குறைந்த மழை பெய்த சமயத்திலும் மழைநீர் வெளிச்செல்லாமல் அந்தப் பாத்திகளில் தங்கி மிஞ்சி விடுகிறது. எனவே, நேர் நேராக விதைப்பதுடன் உயர வரப்புகள் அமைக்கப்பட்ட வறட்சிப் பிரதேசங்களிலும் வரப்புக் கட்டிக் கருவியின் உதவியால் பாத்திகளாக அமைக்கப்படுதல் அத்தியாவசியமாகிறது.

விதை முளைத்துப் பயிர் வளர்ச்சியடைந்து வருங்கால் அந்த நிலத்தில் எதும் களைகள் தென்படுகிறதா, நிலம் பொல பொலப்பாக இருக்கிறதா என்பதை அடிக்கடி சென்று பார்த்து உடனுக்குடன் களைகளை அகற்றி நிலத்தின் மேல் பரப்பை பொல பொலப்படையச் செய்தல் வேண்டும்.

சர்க்கரை வள்ளிக்கிழங்கு சாகுபடி

கூட்டு விவசாய நெறியாளர், திரு பஷிலுல்லாகான் அவர்களின் 29—7—66-ந் தேதிய உரையின் சுருக்கம்.

சர்க்கரை வள்ளியில் சிவப்பு, வெள்ளை என்ற இரண்டு ரகங்கள் உள்ளன. கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியில் நடத்திய ஆராய்ச்சியின் பயனாக வி.2, வி.6, வி.8 வி.12, பி.219 என்ற 5 ரகங்கள் பயிரிட சிபாரிசு செய்யப்படுகின்றன. இவை சுமார் 11,000 கிலோ முதல் 12,000 கிலோ வரை மகசூல் தரும். இவ்வகைகள் தரத்திலும் கூட நாட்டு வகைகளை விட உயர்ந்தவை.

இப்பயிர் வடகிழக்கு பருவக் காற்றினால் பயன் அடைகின்றது. வடகிழக்கு பருவக்காற்று முடிந்த உடனே குளிர்காலம் தொடங்கியதும் கிழங்கு பிடிக்க ஆரம்பிக்கிறது. இப்பயிரின் வயது தினுசைப் பொருத்து 100 முதல் 165 நாட்களாகும். கொடிகளைத் துண்டு துண்டாக நறுக்கி நட்டு சர்க்கரை வள்ளி பயிரிடப்படுகிறது. கொடிகளின் அடியையும் நுனியையும் நீக்கி நடுப்பாகமே நடுவதற்கு உபயோகிக்கப்படுகிறது.

சர்க்கரை வள்ளி மணல்சாரி நிலங்களிலும் பாறைகள் இல்லாத செம்மண் பூமி போன்ற இருமண்பாடான நிலங்களிலும் சீனிக்கிழங்கு நன்றாய் பயிராகிறது. காய்ந்தால் கடினமாகும் மண்வகைகள் இப்பயிருக்கு ஏற்றதல்ல.

சாகுபடி நிலம் நன்றாகப் புழுதியாகும்படி 4 முதல் 6 தடவைகள் உழவேண்டும். கடைசி உழவுக்கு முன் 15 முதல் 20 வண்டி மக்கின எரு போட வேண்டும். பிறகு வரப்புக்கு முக்கால் மீட்டர் இடைவெளி விட்டுப் பார்கள் போடவும் அல்லது 3 மீட்டர் சதுர பாத்திகள் கட்டவும். தாராளமாக தண்ணீர் பாய்ச்சின பிறகு கொடியின் துண்டுகளை வரப்புகளின் சரிவுகளின் அல்லது பாத்திகளில் நடலாம். கொடிக்கு கொடி இருபக்கமும் 25 முதல் 30 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு நடலாம். மேல்பாகம் அதிகமாகவும் அடிபாகம் கொஞ்சம் குறைவாகவும் தெரியும்படி கொடித்துண்டின் மத்திய பாகத்தை பூமியில் புதைக்கவும், கொடிகளுக்கு மத்தியிலுள்ள இடைவெளி முதலிய வற்றைப் பொருத்து ஏக்கராவிற்கு பதினைந்து முதல் முப்பதாயிரம் கொடித்துண்டுகள் வரை தேவைப்படுகிறது. நடவு நட்ட நாட்களில் மழையில்லாவிட்டால் தணணீர் பாய்ச்ச வேண்டும். சரியாக வேர்விட்டு நன்றாய் தழைப்பதற்கு வசதியாக எட்டு அல்லது ஒன்பது நாளில் திரும்பவும் தண்ணீர் பாய்ச்சலாம். மற்ற தோட்டக்கால் பயிர்களைப் போலவே இப்பயிருக்கும் மூன்று முதல் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் பயிர் நன்றாக வளரும். மழைக்காலங்களில், தேவைக்குத் தக்கபடி பத்து அல்லது பதினைந்து தினங்களுக்கு ஒருதரம் தண்ணீர் பாய்ச்சலாம்.

இதை ஒரு வண்டு எளிதில் தாக்கி அதிக அளவில் சேதம் விளைவிக்கிறது. இந்த வண்டு கிழங்குகளைத் தாக்கி அவற்றில் துளைகள் உண்டாக்கி சாப்பிடுவதற்கு தகுதியற்றவையாக ஆக்குகிறது. இதன் சேதத்தைக் குறைப்பதற்கு அறுவடையை பயிர் நட்ட 145 அல்லது 150 நாட்களுக்குள் முடித்துவிட வேண்டும். "டையல்டிரின்" என்ற மருந்தை பதினைந்து நாட்களுக்கொருமுறையாக ஆறு தடவைகள் அடித்தால் இந்த பூச்சியினால் ஏற்படும் சேதத்தை பெருமளவு தவிர்க்கலாம்.

மானாவாரிப் பயிர்கள் ஏக்கருக்கு 2,000 முதல் 3,000 கிலோ வரையும் இறைவைப் பயிர் 3,500 முதல் 7,000 கிலோ வரை கிழங்கு மகசூல் கொடுக்கிறது. மாநில சராசரி மகசூல் 3,500 கிலோ.

இறைவைப் பயிரில் 5,000 முதல் 11,000 கிலோ வரை பச்சைக் கொடிகள் கிடைக்கின்றன. நவம்பர்—டிசம்பர் மாதங்களில் பச்சைத் தீவனப் பயிராக நட்டால் மார்ச் முதல் மே மாதத்திற்குள் 3 அல்லது 4 தடவை கொடிகளை அறுக்கலாம். ஏக்கராவிற்கு 25 முதல் 32 ஆயிரம் கிலோ வரை பச்சை தீவனம் கிடைக்கும். மற்ற பச்சை தீவனப் பயிர்களைக் காட்டிலும் சீனிக்கிழங்கு கொடி கோடை மாதங்களில் மிக தீவிரமாக வளர்கிறது.

மற்ற பச்சைத் தீவனங்களைப் போல் வள்ளிக்கொடியும், கறவைப் பசுக்களுக்கு சிறந்த உணவாகிறது. ஆனால் இதில் ஊட்டச்சத்து அதிகம் இருப்பதால் இதைத் தனித் தீவனமாகக் கொடுத்தால் சாணம் இளகும். காய்ந்த கொடியில் 17 சதவீதம் வரை புரதச்சத்து இருப்பதால் அது ஒரு சிறந்த புரதச்சத்து உணவாகும்.

மானாவாரி நிலக்கடலைக்கு உரமிடுதல்.

மானாவாரி மணிலாவுக்கு 75 கிலோ முதல் 119 கிலோ வரை ஸ்டாண்டர்டு நெ. 7 கலவை உரம் போட வேண்டும். விதை விதைப்பதற்கு முன்பு மாட்டு எரு, வண்டல் இவைகளை கலந்து ஓட்டும் போது இந்த உரத்தையும் போட்டு கலந்து ஓட்ட வேண்டும். பிறகு விதைக்க வேண்டும். கலவை உரம் போடுவதற்கு முன் கம்போஸ்டு, மாட்டு எரு, வண்டல் மண் முதலிய செயற்கை உரங்களையும் போடுதல் நல்ல பயனைக் கொடுக்கும். கலவை உதிரத்தில் சாம்பல் சத்தும், மணிச்சத்தும், தழைச் சத்தும் இருப்பதினால் காய்கள் ஊட்டமாக இருப்பதுடன், நல்ல கனமுள்ள பருப்புகளும் கிடைக்கும். காயினுடைய எடைக்கு பருப்பின் எடை 75 சதவிகிதம் காணும். கலவை உரம் போடாத இடத்தில் பருப்பின் சதவிகிதம் 60 சதவிகிதம் மட்டுமே. ஆகவே 15 சதவிகிதம் பருப்பின் எடை கூடுதலாகக் கிடைக்கிறது. ஆதலால் மார்க்கெட்டில் நல்ல விலை கிடைக்கும்.

விதை விதைப்பதற்கு முன்பாக 125 கிராம் கேப்டான் (அல்லது) அக்ரசான் மருந்தை ஒரு ஏக்கர் விதைப்பிற்குண்டான விதையுடன் நன்றாகக் கலந்து விதைக்க வேண்டும். இது விதையிலிருந்து பரவும் வேர் அழுகல் நோய் முதலிய பூங்காள நோய்களையும் தடுக்கும். 10 கிலோ டி.டி.டீ. 5 சதவிகித மருந்தையும், 10 கிலோ பி.எச்.சி. 10 சதவிகிதம் மருந்தையும் வாங்கிக் கலக்கவும். இதில் சரிபாதி எடுத்து விதை முளைத்த 15 தினம் கழித்து தூவவேண்டும். மறுபாதியை அதன் பின் 10 தினங்கள் கழித்து தூவினால் சுருள் பூச்சியையும் சிவப்பு கம்பளிப்பூச்சியையும் அறவே ஒழிக்கலாம்,

தனி விவசாய அலுவலர் வீரராகவன் அவர்களின் 22—7—66-ஆம் தேதிய உரையின் சுருக்கம்.

இந்தமாதம் கிராம வானொலி நிகழ்ச்சியில் பேசுவோரின் பட்டியல்

பொருள்.	பேசுபவர்கள்.
2—9—1966	
புகையிலை சாகுபடிக் குறிப்புகள்.	ஸ்ரீ பி. கருப்பண்ணன், மாவட்ட விவசாய அதிகாரி, பொள்ளாச்சி, கோவை.
9—9—1966	
கழிவுநீர் உபயோகிக்கும் திட்டம்.	ஸ்ரீ பி. பிணகாபாணி, சூவேஜ் அபிவிருத்தி அதிகாரி, சென்னை.
16—9—1966	
மரவள்ளிக்கிழங்கு சாகுபடி.	ஸ்ரீ எஸ். சாமுவேல் சுந்தரராஜ், தோட்டக்கலை நிபுணர், விவசாயக் கல்லூரி, கோவை மாவட்டம்.
23—9—1966	
விவசாயிகளுக்கும் விவசாய பெண்களுக்கும் பயிற்சி அளித்தல்.	ஸ்ரீ இ. ஜி. சிவசாமி, விவசாயக் கூட்டு நெறியாளர், சென்னை.
30—9—1966	
தேசீய நிருபணங்கள்.	ஸ்ரீ இ. ஜி. சிவசாமி, விவசாயக் கூட்டு நெறியாளர், சென்னை.

1966-ம் ஆண்டு ஜூன் மாதத்திய காலநிலை அறிக்கை.

(சி. பாலசுப்பிரமண்யன், ரா. ஜானகிராமன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப்பிரிவு, கோவை).

இம்மாதம் 1, 5, 7, 8, 17, 24, 26, 29 தேதிகள் வரட்சி நிலவிய தேதிகளாகும். ஏனைய தேதிகளில் 2, 3, 4, 12, 14, தேதிகளில் பரவலான தூரல் இருந்தது; மற்றய நாட்களில் ஆங்காங்கு மாத்திரமே சிறு தூரல் இருந்தது. பகல் உஷ்ணத்தில் ஏற்றத் தாழ்வுகள் எல்லா மாவட்டங்களிலும் காணப்பட்டன.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கற்பட்டு மாவட்டத்தில் கொஞ்சம் மழையிருந்தது. இதனால் சொர்ணவாரி நெல்லும், இதர எள், வேர்க்கடலை போன்ற பயிர்களும் நன்மையடைந்தன. பூமியை உழுவதற்கும் முன்பட்ட சம்பா நெல் விதைப்பதற்கும் இது பயன்பட்டது. தத்துப்பூச்சிகளும், குறுத்துப் பூச்சியும் நெல்லிலும், எள்ளில் பூச்சிகளும் புள்ளி வண்டுகள் கத்திரி போன்ற காய் வகைகளிலும் தென்பட்டு தகுந்த முறைகள் கொண்டு தவிர்க்கப்பட்டன. வட ஆற்காடு மாவட்டத்தில் சராசரிக்குக் குறைந்த மழையே பெய்தது. ஆனாலும் இது கரும்பு வளர்ச்சிக்கு உகந்ததாக இருந்தது. கரும்பில் சிறிதளவு குறுத்துப்பூச்சிகள் ஏற்பட்டு தடுப்பு முறைகள் கையாளப்பட்டன.

தென்னாற்காடு மாவட்டத்தில் பெய்த மழை போதிய அளவில் இல்லை அதனால் குறுவை, சொர்ணவாரி நெற்களின் விதைப்பு, வேற்கடலை, சிறுதானியங்கள் இவற்றின் விதைப்பு முதலியன தாமதப்பட்டன. பூமியில் உள்ள நெல், கரும்பு, கம்பு முதலியன திருப்திகரமாக இருக்கின்றன. தோட்ட ஆமணக்கில் காய்த்துளைப்பான்களும், எள்ளில் புள்ளி நோயும் கண்டு தகுந்த முறைகொண்டு தவிர்க்கப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் மழை மிகக்குறைவு, இருந்த போதிலும் குறுவை நெல் நாற்றுக்கு இது ஓரளவு பயனளித்தது. பட்டுக்கோட்டைப் பகுதிகளில் வெய்யிலின் கடுமையால் வேற்கடலையும், பழமரங்களும் பாதிக்கப்பட்டன. கத்திரியில் புள்ளி வண்டும், வெண்டையில் காய்த்துளைப்பான்களும் தோன்றின. இவை தகுந்த முறைகொண்டு தவிர்க்கப்பட்டன.

சேலம் மாவட்டத்தில் ஏதோ சிறு தூரல் இருந்ததே தவிர இப்பருவத்தில் பெய்ய வேண்டிய மழை ஏமாற்றத்தையே உண்டாக்கியது. இதனால் எல்லாவித விவசாய ஏற்பாடுகளிலும் பிற்போக்கு ஏற்பட்டது. கோவை மாவட்டத்திலும் போதிய மழையில்லை. ஆகையால் சோளம், ராகி, நெல், கரும்பு முதலியன பாதிக்கப்பட்டன. பொள்ளாச்சி மாவட்டத்தில் மழைகுறைவால் பாதிக்கு மேற்பட்ட இடங்களில் வேற்கடலை விதைக்கப்படவில்லை. சிறிதளவில் சிகப்புக்கம்பளிப்பூச்சிகள் தோன்றின. இவையும் தகுந்த முறைகொண்டு தடுக்கப்பட்டன. திருச்சி மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. இது போதிய அளவு இன்மையாலும், காவேரியில் தண்ணீர் குறைந்துவிட்டபடியாலும், விதைப்புக்கு விரைவில் பூமியைத்தயார் செய்ய இயலவில்லை.

மதுரை மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. பின் விதைப்புக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர்ப் பகுதிகளில் மழையிருந்தது. இதனால் வேற்கடலை, சோளம், பருத்தி, வாழை, கரும்பு முதலிய பயிர்கள் நல்லுற்றன. மற்றய பகுதிகளில் மழை வெகுவாக இன்மையால் குளம், குட்டைகள் காய்ந்து விட்டன. விவசாய ஏற்பாடுகளில் எல்லாம் தாமதம் ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன் கோயில், கோயில் பட்டி, திருநெல்வேலி, தென்காசிப் பகுதிகளில் மாத்திரம் தூரல் இருந்தது. இது சோளத்தில் களை எடுப்பதற்கும், அடுத்தாற்போல் நெல் பயிருக்கு பூமியைத் தயார்செய்வதற்கும் உதவிற்று. பருத்தியில் காய்ப்புழுக்களும், தத்துப்பூச்சியும், இலை காய்தல் நோயும் ஏற்பட்டது. வெள்ளைச் சோளத்திலும் நாவாய்ப்பூச்சிகள் கண்டு தகுந்த முறை கொண்டு தவிர்க்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்திலும் போதிய மழையில்லை. காற்றின் வேகத்தால் கன்னியாகுமரிப் பகுதிகளில் மாங்காய்கள் உதிர்ந்து நஷ்டம் ஏற்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் உதகை பகுதிகளில் குறைந்த மழையே இருந்தது. இது பூந்தோட்டங்களுக்கு நன்மை செய்தது. நஞ்சநாடு பகுதிகளில் மழைகுறைவால் உருளைக் கிழங்கு காய்ந்து வருகிறது. இதில் கொள்ளைநோயும் கண்டுள்ளது. தகுந்த தடுப்பு முறைகள் கையாளப்படுகின்றன.

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லிமீட்டர்களில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
1	3-6-66	மதுரை	78.0
2	9-6-66	வேலூர்	54·0
3	10-6-66	உதகமண்டலம்	45·2
4	11-6-66	திருச்சிராப்பள்ளி	51.0
5	28-6-66	சேலம்	68.5

பிராந்திய மழையளவுகள் (மில்லிமீட்டர்க்ளில்)

வரிசை எண்.	பிராந்தியத்தின் பெயர்.	ஜூன் மாதமழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு
1	வட பிராந்தியம் ..	74.7	+ 0.4	சராசரிக்குச்சற்று அதிகம்
2	கீழ்க்கரைப் பிராந்தியம்	22.6	—20.4	மிகக் குறைவு
3	மத்தியப் பிராந்தியம்..	75.4	+13.2	அதிகம்
4	தென் பிராந்தியம் ..	34.7	—17.3	குறைவு
5	மலைப் பிராந்தியம் ..	85.0	—34.9	,,

1966-ம் ஆண்டு ஜூன் மாதக் காலநிலை அறிக்கை
மழை அளவு (மில்லிமீட்டர்களில்).

இடத்தின் பெயர் (1)	ஜூன் மாதத்தில் பெய்த மழையளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து பெய்த மழை அளவு. (4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்) ..	80·0	+32·8	193·0
திரூர்குப்பம்*	79·8	+15·3	176·4
வேலூர்	88·0	+17·6	199·0
குடியாத்தம்*	51·0	—64·0	177·2
கிழ்க்கரைப் பிராந்தியம்			
பாலூர்*	28·0	—27·5	334·7
திண்டிவனம்*	13·5	—40·1	124·5
கடலூர்	50·0	+14·7	142·0
நாகப்பட்டினம்	..	—31·2	93·0
ஆடுதுறை*	7·4	—32·8	117·1
பட்டுக்கோட்டை*	36·8	— 5·6	209·0
மத்திய பிராந்தியம்			
சேலம்	105·0	+25·5	237·0
சேலம்*	160·8	+93·2	300·9
கோயமுத்தூர்*	19·7	—18·4	143·6
கோயமுத்தூர்	18·0	—20·6	118·0
ஆலியார் நகர்*	10·9	—93·9	37·5
திருச்சிராப்பள்ளி	138·9	+93·5	190·0
தென் பிராந்தியம்			
மதுரை	105·0	+ 65·1	169·0
பாம்பன்	..	.. 3·8	227·0
கோவில்பட்டி*	51·6	+ 26·2	179.2
பாளையங்கோட்டை	4·0	— 6·4	129·0
அம்பாசமுத்திரம்*	21·8	— 7·1	116·5
நாகர்கோயில்*	27·9	—121·2	96·5
கன்னியாகுமரி*	32·6	— 73·6	99·2
மலைப் பிராந்தியம்			
கோடைக்கானல்	135·0	+ 27·3	315·0
கூனூர்*	40·1	— 29·0	539·7
உதகமண்டலம்*	101·1	— 24·4	360·4
நஞ்சநாடு*	63·7	—113·5	297·2

*சென்னை விவசாய இலாகாவின்
ஆராய்ச்சிப் பண்ணைகள்.

இந்திய மிளகும் ஏலமும்

(தொகுப்பு எச். எஸ். வேலாயுதம்).

மிளகு, ஏலக்காய் போன்ற வாசனைப் பொருள்கள் நமது வீடுகளில் சுவையேற்றத்திற்கு எவ்வளவு முக்கியத்தும் வாய்ந்து விளங்குகிறதோ அதே போல் நமது நாட்டின் பொருளாதார ஏற்றத்துக்கும் உதவுகிறது. கீழே உள்ள புள்ளி விவரத்தைப் பாருங்கள்.

இந்தியா ஆண்டுதோறும் விளைவிக்கும் மிளகு 28,000 டன். இதன் மதிப்பு 12½ கோடி ரூபாய். இதில் சுமார் 20,000 டன் மிளகு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்த இருபதாயிரம் டன் மிளகின் மதிப்பு 7 முதல் 8 கோடி ரூபாய் வரை ஆகிறது.

இந்தியாவிலிருந்து மிளகு வாங்கும் வெளிநாடுகள் அமெரிக்கா, ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, முதலியவை.

ஏலக்காயை உலகத்திற்கு வழங்குவதே இந்தியா என்று சொல்லலாம். உலகத்தேவையில் 90% இந்தியாதான் சப்ளை செய்கிறது. இந்தியாவில் ஏலம் பயிராகும் பரப்பளவு 1,35,000 ஏக்கர். உற்பத்தியில் 75% ஏலக்காயை இந்தியா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

தென்னங்கன்றுகள் எங்கே கிடைக்கும்

1966-ம் ஆண்டு ஆக்டோபர் மாதத்தில் அரசாங்க தென்னை நாற்றங்காலிலிருந்து வழங்குவதற்கு தயாராக உள்ள தென்னங்கன்றுகளின் விபரம்.

வரிசை எண்.	தென்னங்கன்றுகள் கிடைக்குமிடம். (1)	கிடைக்கும் எண்ணிக்கை. (2)	ஒரு கன்றின் விலை. ரூ. பை (3)
1.	சோழவந்தான், மதுரை மாவட்டம்.	2,000	0·90
2.	பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.	9,000	0.90
3.	குடியாத்தம், வட ஆற்காடு மாவட்டம்.	3,000	0·90
4.	ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்.	600	0·90
5.	செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.	10,000	0·90

தென்னை, விஸ்தரிப்பு அலுவலர்,
திருச்சி.

விவசாயச்செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு
விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.

கிண்டி ராஜபவனத்தில்

மரம் நடு விழா

1—8—66

தமிழக முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் மரம் நடுகிறார்கள்.

362

கிண்டி ராஜபவனத்தில்

மரம் நடுவிழா.

1—8—66

மாநில விவசாய அமைச்சர் திரு.கக்கன் அவர்கள் மரம் நடுகிறார்கள்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966



கிண்டி ராஜபவனத்தில்

வன மகோத்சவம் கொண்டாட்டம்.

1—8—66

தமிழக கவர்னர் திரு. உஜ்ஜல் சிங் அவர்கள் மரம் நடுகிறார்கள்.

கிண்டி ராஜபவனத்தில்

வனமகோத்சவம் கொண்டாட்டம்

1—8—66

தமிழக கவர்னர் திரு. உஜ்ஜல் சிங் அவர்களின் துணைவியார் மரம் நடுகிறார்.